# திருமறைத்தீபம்

BIBLE LAMP

மலர் 5 ஏப்பிரல் – ஜூன் 1999 இதழ் 2



*“நீ கற்று நிச்சயித்துக் கொண்டவைகளில் நிலைத்திரு . . .”* (2 தீமோ. 3:14)

# திருமறைத்தீபம்

Issue No. 2 of 1999

ISBN 1173-7255

காலாண்டுக்கொருமுறை வெளிவரும் திருமறைத்தீபம் சவரின் கிறேஸ் வெளியீடுகளினால் வெளியிடப்படுகின்றது. வேதசத்தியங்களை எடுத்துரைத்து கிருபையின் தேவனை மகிமைப் படுத்துவதே பத்திரிகையின் தலையாய நோக்கம்.

பத்திரிகையின் பெயர் குறிப்பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக்கூடாது.

வருட சந்தா: நியூ. $16.00

**ஆசிரியர்: ஆர். பாலா**
**Editor:** R. Bala
**Publishers:** Sovereign Grace Publications
**Address:** Bible Lamp
P. O. Box 62 159
Sylvia Park
Auckland 1006
New Zealand
**Telphone:** 64 9 272 8061
**Fax:** 64 9 272 8032
**email:** bala@ihug.co.nz
**Web site:** www.biblelamp.org

**கொள்கைகளையும், கோட்பாடுகளையும் புறக்கணித்து, சத்தியத்தை வெளிப்படையாக எடுத்துக் கூறாத ஒரு பத்திரிகையை இலக்கியத் தடங்கல் என்றுதான் கூற வேண்டும்.**

*- சி. எச். ஸ்பர்ஜன் -*
*(1834-1892)*

## ஆசிரியரிடமிருந்து . . .



இன்று தமிழ் மக்கள் மத்தியில் கிறிஸ்தவம் என்ற பெயரில் வேதத்தின் அதிகாரத்தை நிராகரித்து நடந்து வரும் கூத்துக்களைப் பலரும் வெறுக்கத்தான் செய்கிறார்கள். இவற்றிற்கெல்லாம் அடிப்படைக் காரணம் என்ன என்று ஆராய்ந்து பார்த்தால் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்திற்குத் தங்களுடைய வாழ்க்கையில் கொடுக்க வேண்டிய இடத்தை அநேகர் கொடுக்க மறுப்பதுதான் என்பதைப் புரிந்து கொள்ளலாம். பத்துக்கட்டளைகளுக்கும் நமக்கும் எந்தவித சம்பந்தமுமில்லை என்பது போல் வீட்டிலும், வெளியிலும், சபையிலும் அநேகர் நடந்துவரும் போக்கை நாம் பார்க்கிறோம். பத்துக் கட்டளைகளை நிராகரித்துவிட்டு பரிசுத்த வாழ்க்கையை நம்மால் வாழ முடியாது என்ற உண்மையே அநேகருக்கு உரைப்பதில்லை. இதற்கு சபைத்தலைவர்களும்கூட விதிவிலக்கல்ல.

இவ்விதழின் சிறப்புக்கட்டுரையான "உப்பு தன் சாரத்தை இழந்தால்" என்ற ஆக்கத்தின் மூலம் உப்புச்சப்பில்லாத இன்றைய கிறிஸ்தவத்தின் போக்கைப் படம்பிடித் துக் காட்டுவதுடன் அது திருந்துவதற்கான சத்தான ஆலோசனைகளையும் மொரிஸ் றொபட்ஸ் வழங்குகிறார்.

விசுவாச அறிக்கையின் முதல் அதிகாரத்திற்கான விளக்கவுரை இவ்விதழுடன் நிறைவு பெறுகிறது. வேதத்தின் மெய்த்தன்மையைத் தெளிவாகப் புரிந்து கொள்ள இவ்வதிகாரம் பலருக்கும் பயன்பட்டிருக்கும் என்று நம்புகிறோம். உங்கள் கருத்துக்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். அடுத்த இதழில் இரண்டாம் அதிகாரத்திற்கான (திரித்துவம்) விளக்கவுரையைப் போதகர் அலன் டன் (Alan Dunn, Flemington, NJ) வழங்கவிருக்கிறார்.

கடைசியாக, அட்டைப்படத்தைப்பற்றிய ஒரு விளக்கம். பவுல் தனது அப்போஸ்தலப்பிரதிநிதியான தீமோத்தேயுவுக்கு வேதபோதனையளிக்கும் ஒரு காட்சியை அதில் பார்க்கலாம். நீ கற்று நிச்சயித்துக்கொண்டவைகளில் நிலைத்திரு என்று பவுல் தீமோத்தேயுவுக்கு கூறுவது போலிருக்கிறதல்லவா? நாம் கற்று நிச்சயித்துக் கொண்டவைகளில் நிலைத்திருக்க வேண்டியதன் அவசியத்தைப்பற்றி இவ்விதழில் வாசிக்கலாம். இதுவரை வந்த இதழ்களைப்போலவே இவ்விதழும் உங்களுக்குப் பயன்படும் என்று நம்புகிறோம்.

*உப்பில்லாப் பண்டம் குப்பையிலே என்று சொல்வார்கள். ஆனால், ஒரு கிறிஸ்தவன் உப்புச்சப்பற்ற வாழ்க்கையை வாழலாமா? அது ஏன் தவறு என்று விளக்குகிறார் மொரிஸ் ரொபட்ஸ்.*

# உப்பு தன் சாரத்தை இழந்தால்!

**மொரிஸ் ரொபட்ஸ்**

பலருக்கும் பரிச்சயமான புதிய ஏற்பாட்டின் மலைப்பிரசங்கத்தில், இயேசு கிறிஸ்து தனது மக்கள் இவ்வுலகத்தில் உப்பாயிருக்கிறார்கள் என்று கூறுகிறார் (மத்தேயு 5:13). கிறிஸ்தவர்கள் இப்படித்தான் இருக்க வேண்டுமென்றும், அவர்கள் தங்களுடைய குணாதிசயத்தால், இயற்கையாகவே அழுகிப்போகும் தன்மைகொண்ட சமுதாயத்தை அழுகாமல் காப்பாற்றுகிறார்கள் என்றும் இயேசு சொல்கிறார்.

கிறிஸ்தவர்கள் மற்றவர்களைவிட வேறுபாடானவர்கள். மற்றவர்கள் தங்களுடைய செயல்களால் சமுதாயம் மோசமடைந்து, மிகக்கீழான நிலைக்குப் போவதற்குக் காரணமாயிருக்கும்போது, கிறிஸ்தவர்கள் இதற்கு எதிர்மாறானதைச் செய்து சமுதாயத்தை உயர்த்துகிறார்கள். தங்களுடைய வாழ்க்கையில் முன்னுதாரணமாக இருந்தும், தங்களுடைய சாட்சியின் மூலமும் சமுதாயத்தின் ஒழுக்க உயர்விற்கும் ஆன்மீக உயர்விற்கும் காரணமாக இருக்கிறார்கள். அவர்கள், பாவத்தினாலும், சுயநலத்தினாலும், அவிசுவாசிகள் சமுதாயத்திற்கு செய்யும் தீங்கைத் தடுக்க முனைபவர்களாகவும், கீழ்நோக்கிப்போய்க் கொண்டிருக்கும் சமுதாயத்தைத் தடுத்து நிறுத்தும் வண்டிச்சில்லாகவும் செயல்படுகிறார்கள்.

இருந்தபோதும், இயேசு கிறிஸ்து, சிலவேளைகளில் உப்பு தனது சாரத்தை இழந்து போகலாம் என்று கூறுகிறார். அதாவது, கிறிஸ்தவர்கள் தம்மைச் சுற்றியுள்ள உலகத்து மக்களைப் போல் வாழ்ந்து தங்களுடைய சுயமதிப்பை இழந்து போகலாம் என்பது இதற்குப் பொருள். கிறிஸ்தவர்கள், தொடர்ந்து தங்களுடைய விசுவாசத்திற்கு எதிர்மாறான முறையிலும், அதோடு தொடர்பற்ற விதத்திலும் வாழும்போது, தமது கிறிஸ்தவத் தன்மையை இழந்து போகிறார்கள். கிறிஸ்துவே மனிதர்களைப் பாவத்திலிருந்து இரட்சிக்கும் ஒரே தேவன் என்றும், அவரே மகிமையின் தேவன் என்றும் விசுவாசிப்பவனே கிறிஸ்தவன். ஆனால், கிறிஸ்து பாவத்திலிருந்து விடுதலை பெற்றுத்தரவே வந்தார் என்பதை சிலவேளைகளில் கிறிஸ்தவர்கள் மறந்து விடக் கூடிய ஒரு வாய்ப்பும் உண்டு. உண்மையான கிறிஸ்தவன் பாவத்தை வெறுத்து, ஒதுக்கும் மனப்பாங்கைக் கொண்டவன். ஆனால், தங்களுடைய வாழ்க்கையிலும், மற்றவர்களுடைய வாழ்க்கையிலும் பாவத்தை சகிக்கக்கூடிய கிறிஸ்தவர்கள் ஒரு சந்ததியில் தோன்றிவிடக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படலாம். அத்தகைய நிலைமையிலேயே உப்பு தன்னுடைய சாரத்தை இழந்து போகிறது.

திருச்சபை நல்ல நிலைமையிலிருந்தபோது, நமது பிதாக்களும், முன்னோர்களும் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ச்சியுற்று பரிசுத்தமாக இருந்ததுபோல் நாம் இன்று வாழவில்லை என்ற நிதர்சனமான உண்மையை நம்மால் மறைக்க முடியாது. ஐம்பது அல்லது நூறு வருடங்களுக்கு முன்பு இருந்ததைப்போல் பக்திவிருத்தி இன்று நம்மத்தியில் இல்லை என்று கூறுவது உண்மையை மிகைப்படுத்துவதாகாது. சமீபத்தில் டபிள்யு ரொபட்சன் நிக்கோல் என்பவர் எழுதிய திருச்சபையின் இளவரசர்கள் என்ற நூலை நான் வாசித்துக் கொண்டிருந்தபோது இதைப்பற்றி மறுபடியும் நான் சிந்தித்தேன். இந்நூல் 1900 ஆரம்ப காலப்பகுதியிலும், அதற்கு சிறிது முன்பும் வாழ்ந்த ஏறக்குறைய இருபத்தி ஐந்து பிரசங்கிமார்களின் வாழ்க்கையைப் பற்றி சுருக்கமாக விளக்குகின்றது. இந்நூலை வாசிக்கும்போது என்மனதை உலுப்பிய காரியமென்னவென்றால், இக்காலப்பகுதியில் அநேக ஆன்மீக வாழ்க்கையில் வளம் பெற்ற பிரசங்கிமார்கள் சடுதியாக இவ்வுலகை விட்டு மறைய நேர்ந்ததுதான். இவர்களில் ஸ்பர்ஜன் (இங்கிலாந்து), ஜோன் கென்னடி, போனர் சகோதரர்கள், ஜேம்ஸ் பெக், அலெக்சான்டர் மெக்லாரன் (ஸ்கொட்லாந்து) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் அற்புதமான மனிதர்களாக இருந்ததுடன், ஆன்மீக வளமுடைய பெரும் சபைகளில் பிரசங்கம் செய்து வந்தனர். நாம் வாழும் நாட்களைவிட இவர்களுடைய காலத்தில் ஆன்மீக உப்பின் சாரம் அதிக வலிமையுடையதாக இருந்தது. இவ்வாறு கூறுவதன் மூலம் இம்மனிதர்களுக்கு நான்

துதிபாடவோ, அல்லது இன்றும் நம்மத்தியில் வாழும் சில நல்ல கிறிஸ்தவர்களை மதிப்புக் குறைவாக நடத்தவோ முயலவில்லை. ஆனால், நம் காலத்து ஆன்மீக வளம் இப்பெரியோரின் காலத்தைவிட குறை வானது என்பதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

இப்பெரியோர்களைக் கல்லறையில் இருந்து எழுப்பி, நம்காலத்து கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கையைப்பார்க்கும்போது, அவர்களை வியப்படையச்செய்வது என்ன? என்று கேட்டால், அவர்கள் என்ன பதில் சொல்வார்கள் என்பதைக் கேட்க ஆவலாய்த்தான் இருக்கிறது. அவர்கள், தங்கள் காலத்துக் கிறிஸ்தவத்தைவிட இன்றைய கிறிஸ்தவம் பல வேறுபாடான தன்மைகளைக் கொண்டிருக்கின்றது என்று நிச்சயமாகக் கூறுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அவ்வேறுபாடுகளில் அவர்கள் மிகவும் உன்னிப்பாக கவனிக்கப்போவதென்ன வென்றால் அவர்களுடைய காலத்துக் கிறிஸ்தவர்கள் எவ்வளவு தூரம் பரிசுத்த வாழ்க்கைக்கு தங்களுடைய வாழ்க்கையில் முக்கியத்துவம் கொடுத்தார்கள் என்பதுதான். அதற்கே, அக்கிறிஸ்தவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் முதலிடம் கொடுத்தார்கள். அவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் ரொபட் மரே மெக்சேயின், ரதபோர்ட், தொமஸ் பொஸ்டன் போன்றோரை “ஹீரோக்களாகக்” கருதினர். ஆன்மீகச் செய்திகளை வாசிப்பதையும், ஆன்மீகக் காரியங்களைப்பற்றிப் பேசுவதை யுமே அவர்கள் தங்கள் வாழ்க்கையில் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். இதற்கு மாறாக, நாம் கிறிஸ்தவ விசுவாசம் என்றால் என்ன? என்பதைப் புரிந்து கொள்வதில் இன்று காலத்தைச் செலுத்திக் கொண்டிருக்கிறோம். அக்காலத்து கிறிஸ்தவர்கள் விசுவாசித்த காரியங்கள் அவர்களுடைய வாழ்க்கையில் பெரும் மாறுதலை ஏற்படுத்தின. கிறிஸ்தவம் இவ்வுலகில் தளைத்திருந்த காலங்களிலெல்லாம் இதனையே நாம் பார்க்கிறோம். ஆனால், இன்று நாமோ, நாம் விசுவாசிக்கும் காரியங்களால் எந்தவித மாறுதலையும் அடைவதில்லை. இதன் பலனாக, சிறப்பான கிறிஸ்தவர்கள் என்ற பெயர் பெற்றவர்களை இன்று நம்மத்தியில் காண்பது அரிதாக இருக்கின்றது.

இன்று நாம் ஏன் பரிசுத்தமான வாழ்க்கை வாழ்வதில் அக்கறையெடுப்பதில்லை? என்பதற்கு ஒரு காரணமிருக்கின்றது. நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற சமுதாயத்தின் நிலைமையையே இதற்குக் காரணமாக சுட்டிக் காட்டுகின்றோம். இன்று அநேகக் கிறிஸ்தவர்களில் அக்கிரமம் மிகுந் திருப்பதோடு, அவர்களில் அன்பும் தணிந்து போயிருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் (மத்தேயு 24:12). அசுத்தமான எண்ணங் களும், இன்று எல்லாப் பக்கங்களிலும் இருந்து நம்மைச்சுற்றித் தாக்குகின்றன. பரிசுத்தமானவர் களின் வீடுகளிலெல்லாம், டெலிவிசன் இன்று சுதந்திரமாக நுழைந்து உலகப்பிரகாரமான வாழ்க்கைத்தரத்தைத் துணிகரமாக அறிமுகப் படுத்துகின்றது. இன்றைய நவீன சமுதாயத்தில் வீணான மாம்ச இச்சையும், நவீன உடையலங் காரமும், கீழ்த்தரமான இசையும், பலனற்ற விளையாட்டுகளும் அநேக கிறிஸ்தவர்களை இன்று பாதித்துள்ளன. “உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை என்று அறியீர்களா?” என்ற யாக்கோபு வின் (4:4) வார்த்தைகளை நாம் எவ்வளவு தூரம் மறந்திருக் கிறோம். நம்மத்தியில் இன்று காணப்படும் இத்தகைய தரம் குறைந்த நிலைமைக்கு நாம் எந்தவித சாக்குப்போக்கும் சொல்ல முடியாது.

> இன்று நாம், நாம் விசுவாசிக்கும் காரியங்களால் எந்தவித மாறுதலையும் அடைவதில்லை. இதன் பலனாக, சிறப்பான கிறிஸ்தவர்கள் என்ற பெயர் பெற்றவர்களை இன்று நம்மத்தியில் காண்பது அரிதாக அரிதாக இருக்கின்றது.

உப்பு தன் சாரத்தை இழந்தது போல் கிறிஸ்தவம் தன்னைச் சுற்றியுள்ள உலகத்தைப்போல் இன்று மாறிவிட்டது. இந்நிலை மையில் கிறிஸ்தவர்கள் தங்க ளுடைய இச்சைகளைத் திருப்தி செய்து கொள்ள மேலும் மேலும் சுதந்திரம் கேட்டு அலைகிறார் கள். தாங்கள் வாழும் உலகப்பிர காரமான வாழ்க்கையை நியாயப்படுத்தும் முயற்சிகளிலும் ஈடுபடுகிறார்கள். களியாட்டங் களுக்குப் போவதிலும், சாராயக் கடைகளுக்கு போவதிலும் எந்தத்தப்பும் இல்லை என்று மற்றவர்களை அவர்கள் ஊக்கப் படுத்திப் பேசுவதையும் பொதுவாகவே பார்க்க லாம். அவர்கள் உலகத்து மனிதர்களைப்போல் பேசி நடப்பதையும் பார்க்கலாம். உலக இச்சை களுக்கு தம் வாழ்க்கையில் இடங்கொடுத்து வாழ்பவர்களை அவர்கள் நியாயப்படுத்துவார்கள். தங்களுடைய உலகப்பிரமானமான வாழ்க்கையில் குறைகாணுபவர்களை அவர்கள் வெறுப்பார்கள். தம்மைவிட ஞானமுள்ளவர்களையும், ஆன்மீக வாழ்க்கையில் வளர்ச்சியுற்றிருப்பவர்களையும் பலித்துப் பேசுவார்கள். போதகர்களினதும், பெற்றோர்களினதும் அதிகாரத்திற்கு எதிராக நடந்து கொள்வார்கள். இச்செயல்களை அவர்கள், தாங்கள் ஒருபோதுமே மனந்திரும்பவில்லை என்று அறிந்து கொள்ளும்வரையும் அல்லது கர்த்தர் அவர்களைத்தண்டித்துத்திருத்த முயலும் வரையி லும் தங்கள் வாழ்க்கையில் தொடர்ந்து செய்து கொண்டிருப்பார்கள். கிறிஸ்துவை விசுவாசிக்கி றோம் என்று கூறுகின்றவர்கள் அனைவரும்

உண்மையான் கிறிஸ்தவத்தை ருசி பார்க்க வேண்டுமென்றால் நாம் செய்ய வேண்டிய மிக முக்கியமான காரியம் ஒன்று உண்டு. அது என்ன வென்றால், எமது வாழ்க்கையில் கர்த்தரின் நியாயப்பிரமாணத்தை நாம் நிச்சயமாக கடைப் பிடிக்க வேண்டும் என்ற உண்மையை நாம் உணர்ந்து ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தாம் கிறிஸ்துவை அறிந்து கொண்டபின் நியாயப் பிரமாணம் தங்களுக்குத் தேவையில்லை என்று நினைப்பது பலரும் பொதுவாகவே விடுகின்ற ஒரு பெரும் தவறாகும். ரோமர் 6:14 போதிக்கும், "நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால்" என்ற வசனத்தை சுட்டிக்காட்டி வாதாட முயல்வதும் பொருந்தாது. இப்போதனை உண்மையில் மிக அருமையான, முக்கியமான போதனைதான். ஆனால், இது கிறிஸ்தவர்கள் பத்துக்கட்டளை களுக்குக் கீழ்ப்படிய வேண்டிய அவசியமில்லை என்ற போதனையை அளிக்க வில்லை. இப்போதனையைப் பலரும் சரியாகப் புரிந்து கொள்ளாததால், நமது விசுவாச அறிக்கையும், வினா விடைப் பயிற்சியும் வேத அடிப் படையில் போதிக்கின்றபடி, பத்துக் கட்டளைகளை ஒருவிசுவாசி தன் வாழ்க்கையில் ஏன் கடைப்பிடிக்க வேண்டும் என்று பார்ப்போம்.

**1. கர்த்தரில் காணப்படும் பரிசுத்தத்தை பத்துக்கட்டளை கள் வெளிப்படுத்துவதால் ஒரு விசுவாசி நிச்சயமாக தன் வாழ்க்கையில் அவ்விதிகளை கடைப்பிடிக்க வேண்டியவனாக இருக்கிறான்.**

கர்த்தர் பரிசுத்தமானவராக இருப்பதாலும், நாம் அவருடைய பிள்ளைகளாக இருப்பதாலும் நாமும் பரிசுத்தராக இருக்க வேண்டும். கர்த்தரின் பத்துக் கட்டளைகள் மனித சிந்தனையின் மூலம் உருவான சில கட்டளைவிதிகள் அல்ல. அவை மனிதனின் எல்லா நடத்தைகளுக்கும் வழிகாட்டி யாக அமையும் முறையாகத் தொகுக்கப்பட்ட தேவ கட்டளைகள். அவை மனிதனின் அனைத்து நடத்தைகளையும், உறவுமுறைகளையும் உள்ள டக்கி அவற்றிற்கான விதிகளைப் போதிக்கின்றன.

பத்துக்கட்டளைகளின் முதல் நான்கு கட்டளை களும் நாம் மெய்யான தேவனை மட்டுமே வழிபட வேண்டும் என்று போதிக்கின்றன. அவரை வழிபடும்போது, எந்தவிதமான அடை யாளங்களைப் பயன்படுத்தியோ, அல்லது உருவங் களைப்பயன்படுத்தியோ அவரை வழிபடக் கூடாது. அத்தோடு, தேவபயத்துடன் அவரை அணுகி, ஓய்வு நாளான சபத்து நாளையும் நாம் கவனத்துடன் கடைப்பிடிக்க வேண்டும் என்று இம்முதல் நான்கு கட்டளைகளும் போதிக்கின்றன. ஏனைய ஆறு கட்டளைகளும் சமுதாயத்தின் ஒவ்வொரு அதிகாரத்திற்கும் நாம் மதிப்புக் கொடுத்து அவற்றிற்கு அடங்கி நடக்க வேண்டும் என்று போதிக்கின்றன. அதோடு மற்றவர்களின் வாழ்க்கைக்கு எந்தவித ஊறுவிளைவிக்காமலும், அவர்களுடைய பொருட்களில் இச்சை வைக்கா மலும், அவர்களுடைய பெயருக்கு எந்தவித களங்கம் ஏற்படுத்தாமலும் இருக்க வேண்டும் என்றும் இவை போதிக்கின்றன. இவற்றிற்கு மேலாக பத்துக் கட்டளைகள் நமது எண்ணங் களும், சிந்தனைகளும்கூட பரிசுத்தமாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றன. இதுவே தேவன் ஏற்படுத்தியுள்ள விதியாக இருக்கின்றது. இவையனைத்தும் தேவனுடைய விருப்பத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டிராமல் அவருடைய மெய்த்தன்மையையும் அடித்தள மாகக் கொண்டமைந்துள்ளன. இக்கட்டளைகள் தேவன் யார் என்பதை நமக்கு வெளிப்படுத்தி, நாம் பின்பற்றவேண்டிய அவருடைய சித்தத்தின் மொத்த உருவமாக அமைந்து காணப்படுகின்றன.

> கிறிஸ்துவை அறிந்து கொண்ட பின் நியாயப் பிரமாணம் தங்க ளுக்குத் தேவை யில்லை என்று நினைப்பது பலரும் பொது வாகவே விடு கின்ற ஒரு பெரும் தவறாகும்.

**2. பத்துக்கட்டளைகளை விசுவாசிகள் நிரந்தரமாக தங்கள் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும் என்று சபைப் போதகர்கள் போதிக்க வேண்டும் என்று இயேசு கிறிஸ்து தன்னுடைய மலைப் பிரசங்கத் தில் தெளிவாகப் போதித்துள்ளார்.**

இயேசு கிறிஸ்து இதை மிக அழுத்த மாகவும், தெளிவாகவும் மலைப் பிரசங்கத்தில் பின்வருமாறு கூறியுள் ளார்: "நியாயப்பிரமாணத்தை யானாலும், தீர்க்கதரிசனங்களை யானாலும், அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்லநிறைவேற்றுகிறதற்கே வந்தேன். வானமும் பூமியும் ஒழிந்து போனாலும், நியாயப் பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்து போகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்."

பாவத்தில் வீழ்ந்துள்ள மனித இருதயத்தில் நியாயப் பிரமாணத்தை தொலைத்துவிட வேண்டும் என்ற எண்ணம் எப்போதும் இருக்கும் என்பது இயேசு கிறிஸ்துவுக்கு தெரியும். ஆகவேதான், நியாயப் பிரமாணத்தின் நிரந்தரமான தன்மையை எந்தவித சந்தேகத்திற்கும் இடமில்லாமல் அவர் இங்கே தெரியப்படுத்துகிறார். அத்தோடு, பிரசங்கிமார் களும், சபையாரும், கிறிஸ்துவை அறிந்து கொண்ட பின்பு நியாயப்பிரமாணத்தைத் தங்கள் வாழ்க்கை யில் தொடர்ந்து கடைப்பிடிக்காவிட்டால் பெரும் இழப்பைச் சந்திக்க நேரிடும் என்றும் தெரிவிக்கி றார். இதைப்பற்றிக் கூறும்போது இயேசு, "ஆகையால், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோக ராஜ்யத் தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான்;

இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ பரலோக ராஜ்யத்தில் பெரியவன் என்னப்படு வான்” என்கிறார் (மத்தேயு 5:19).

நாம் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதனால் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்கிறோம் என்று இயேசு போதிக்கவில்லை. அடுத்த வசனத்தில் இதை அவர் சந்தேகமறத் தெரிவிக்கிறார். “வேதபாரகர், பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்கிறேன்” என்கிறார் இயேசு (மத்தேயு 5:20). பரிசேயர்கள் கடுமையான விதிகளை, தேவனுடைய நியாயப் பிரமாணத்தின் பெயரில் ஏற்படுத்தி, அவற்றைக் கடைப்பிடிப்ப தன் மூலம் இரட்சிப்பை அடைய முயற்சித்தார் கள். ஆனால், உண்மையான கிறிஸ்தவனுடைய நீதி அவர்களுடைய நீதியைவிட மேலானதாகவும் அதிகமானதாகவும் உள்ளது. ஏனெனில், இந்நீதி தங்களுடைய இரட்சிப்பிற்காக கிறிஸ்துவை விசுவாசித்தவர்கள் எல்லோருடைய கணக்கிலும் வைக்கப்படுள்ள, கிறிஸ்துவின் நீதியாக இருக்கின்றது.

ஆனால், நாம் இரட்சிக்கப்பட்டு, விசுவாசிகளாக மாறியபின், இம்மகிமையுள்ள பத்துக்கட்டளை களை நாம் எமது வாழ்க்கையிலும் மற்றவர்களுடைய வாழ்க்கையிலும் கடைப்பிடிக்க வேண்டிய விதிகளா கப்பின்பற்ற வேண்டும். சுருக்கமாகக் கூறப்போனால், நாம் பத்துக் கட்டளைகளின் மூலமாக இரட்சிக் கப்படுவதில்லை; ஆனால், அக்கட்டளைகளைப் பின்பற்று வதற்காகவே இரட்சிக்கப்படுகிறோம். ஆகவே, பூரணமான அக்கட்டளைகளின் மாண்பையும், ஆன்மீகத்தன்மையையும் நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே இயேசு கிறிஸ்து அதைப்பற்றி நமக்கு விளக்குகிறார். மத்தேயுவின் 5 வது அதிகாரத்தின் 21-48 வசனங்களில் அதைப்பற்றிய விளக்கத்தைத் தருகிறார். இப்பகுதியின் கடைசி வசனம் இயேசு கிறிஸ்து இப்பகுதியில் அளிக்கும் பத்துக்கட்டளைகள் பற்றிய போதனைகளின் சுருக்கத்தைத் தருகிறது. அங்கே இயேசு சொல்கி றார், ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள் (மத்தேயு 5:48). பரலோகத்திலிருக்கும் நமது பிதா பரிபூரண மானவர். அதேபோல், கிறிஸ்தவர்களான நாமும் இருக்க வேண்டும். இத்தகைய பூரணத்துவத்தை அடைவதற்கு நாம் கிறிஸ்தவ வாழ்க்கையில் எந்தவிதமான அற்புத அனுபவங்களையும் எதிர்பார்க்காமல், கவனத்தோடு பத்துக்கட்டளை களைப் பின்பற்ற வேண்டும்.

தேவனுடைய கட்டளைகள் பள்ளி ஆசிரியரைப் போல இருந்து கிறிஸ்துவுக்குள்ளான இரட்சிக்கும் விசுவாசத்தை நோக்கி நம்மை வழிநடத்துகிறது (கலா. 3:24). நாம் இரட்சிப்பைப்பெற்றுக் கொண்ட பின் கிறிஸ்து நாம் பத்துக்கட்டளைகளின்படி அவருக்காக வாழும் வாழ்க்கையை நோக்கி அழைத்துப்போகிறார்.

**நாம் பத்துக் கட்டளைகளின் மூலமாக இரட்சிக்கப்படுவதில்லை; ஆனால், அக்கட்டளைகளைப் பின்பற்றுவதற்காகவே இரட்சிக்கப் பட்டுள்ளோம்.**

### 3. பவுல் அப்போஸ்தலனும் பத்துக் கட்டளை கள் விசுவாசியினுடைய வாழ்க்கையில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நிரந்தரமான விதிகள் என்று போதித்துள்ளார்.

நியாயப்பிரமாணத்தின் அவசியத்தை வலியுறுத்திப் பவுல் எழுதியுள்ள பல வேதப்பகுதிகளில் முக்கியமானதொன்றை மட்டும் உதாரணத்திற்கு எடுத்துக்கொள்ளோம். 1 கொரிந்தி யருக்கு எழுதிய நிருபத்தில் பவுல், “யூதரை ஆதாயப்படுத்திக் கொள்ளும் படிக்கு யூதருக்கு யூதனைப்போலவும், நியாயப்பிரமாணத்தைக்கைக் கொள்ளுகிறவர்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும் பொருட்டு நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவனுமானேன். நியாயப் பிரமாணமில்லாதவர்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு அவர்களுக்கு நியாயப்பிமாணம் இல்லாதவனைப் போலவுமானேன். அப்படியிருந்தும் நான் தேவனுக்கு முன்பாக நியாயப்பிரமாணமில்லாத வனாயிராமல், கிறிஸ்துவின் பிரமாண த்துக்குள்ளானவனாயிருக்கிறேன்” என்று கூறுகிறார். (1 கொரி. 9:20-21). இங்கே, சுவிஷேச ஊழியத்தின் மூலம் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொள்வதெப்படி? என்பதையே பவுல் விளக்குகிறார். சுவிஷேச ஊழியத்தில் ஈடுபடும்போது ஆண்டவரை அறியாதவர்களுடைய மனதைப்புண்படுத்தாமலிருக்க, கிறிஸ்துவுக்கு விரோதமில்லாதவகையில், அவர்களுடைய பழக்க வழக்கங்களை நாம் அனுசரித்து நடக்க வேண்டும். பலவித கலாச்சார, பாரம்பரியங்களைக் கொண்ட வர்களுடைய மனம் புண்படக்கூடாதென்பதற்காக நாம் அநேக விதங்களில் அவர்களை அனுசரித்து நடக்கிறோம். ஆனால், எல்லா சந்தர்ப்பங்களிலும், சுவிஷேச ஊழியத்தில் ஈடுபடுகின்றபோதும் நாம் கிறிஸ்துவின் பிரமாணத்துக்குட்பட்டவர்களாகவே நடந்து கொள்ள வேண்டும் (21 ம் வசனம்). அதாவது, எச்சந்தர்ப்பத்திலும் கிறிஸ்துவின் வார்த்தைகளுக்கு முரண்படும் வகையில் நாம் நடந்து கொள்ளக் கூடாது.

இங்கே பவுல், தான் பத்துக்கட்டளைகளை கிறிஸ்து வின் நியாயப்பிரமாணமாகவே கருதுவதாகவும், அவற்றிற்குக் தான் கட்டுப்பட்டு நடப்பதாகவும் கூறுகிறார். இவ்விதமாகவே ஒவ்வொரு விசுவாசியும் விசுவாசிக்க வேண்டும். நாமெல்லோரும், பவுலைப்போலவே, கிறிஸ்துவின் நியாயப் பிரமாணத்திற்குக் கட்டுப்பட்டவர்கள் (5:21).

கடைசியாக இவ்வேதப்பகுதியைக்குறித்து ஒருவிடயத்தை நான் நினைவுபடுத்த விரும்பு கிறேன். நாம் செய்யும் அனைத்து சுவிஷேச ஊழியங்களிலும் பத்துக்கட்டளைகளுக்கு நாம் மிக முக்கியமான இடத்தை அளிக்க வேண்டும். அவையே நமது சுதந்திரத்தை கட்டுப்படுத்தி நம்மை வழிநடத்தும் கட்டளைகளாக உள்ளன. இவ்வுலக மக்களை அனுசரித்து நடப்பதற்காகவும், அவர்களுடைய மனதைப் புண்படுத்தக்கூடா தென்பதற்காகவும், நாம் என்ன பேச வேண்டும், எதை அணிய வேண்டும் என்பது போன்ற காரியங்களில் நாம் ஓரளவுக்கே அவர்களோடு ஒத்துப்போக முடியும். இவ்வாறு அவர்களோடு ஒத்துப்போகும் போதெல்லாம் நாம் கிறிஸ்துவின் வார்த்தைகளுக்கு எந்தவிதத்திலும் முரண்படாத வகையில் நடந்து கொள்ள வேண்டியது அவசியம். இதையே கிறிஸ்துவும், தனது அப்போஸ்தலர் களுக்கும், திருச்சபைக்கும் சுவிஷேச ஊழியத்தைக் குறித்துக் கொடுத்த கட்டளை மூலம் நினைவுபடுத்துகிறார். “வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள், இதோ உலகத்தின் முடிவு பரியந்தம், சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்” என்றார். நாம் உணர்ச்சிவசப்பட்டு எதையாவது செய்துவிடக்கூடாது என்பதற்காக, நான் உங்கள்ளுக்குக்கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் என்று வலியுறுத்திக் கூறியுள்ளார். நாம் சுவிஷேசத்தை சொல்லுவதன் மூலம் பாவிகள் மனம்மாற வேண்டும் என்று மட்டும் எதிர்பார்க்காமல், அவர்கள் மனம்மாறி கிறிஸ்துவின் ஒவ்வொரு கட்டளையையும் தங்கள் வாழ்க்கையில் கடைப் பிடிப்பவர்களாகவும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்க வேண்டும். ஆகவே, மனம்மாறிய பாவிகள் கர்த்தரின் நியாயப்பிரமாணத்தைக் கவனத்தோடு கடைப்பிடிக்க வேண்டும் என்ற போதனையை நிச்சயமாகப் பெற்று அதன்படி நடப்பவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் அவ்வாறு நடக்க வேண்டுமென்றால் முதலில், நாம் அவர்களுக்கு சிறந்த முன்னுதாரணமாக இருக்க வேண்டியது அவசியம்.

கிறிஸ்தவர்களாகிய நாம் கர்த்தரின் நியாயப் பிரமாணத்தை சிறப்பான முறையில் கடைப் பிடிப்பதில் மிகுந்த அக்கறை காட்டுதல் அவசியம். இம்முறையிலேயே இவ்வாழ்க்கையில் நாம் தேவனை மகிமைப்படுத்தவும், அனுபவிக்கவும் முடியும். இவ்வழியிலேயே இவ்வுலக இச்சைகளின் ஆபத்திலிருந்து நம்மை நாம் காப்பாற்றிக் கொள்ள வும் முடியும். இதன்மூலமே நாம் சுவிஷேசத்திற்கு பெருமை சேர்க்கவும், தேவபக்தியின் வேஷத்தைக் கொண்டிருக்காமல், அதன் மெய்யான பெலனை வெளிப்படுத்தவும் முடியும் 2 தீமோ. 3:5).

இவ்வேத சிந்தனைகளை நாம் ஆரம்பித்தபோது கிறிஸ்து தனது மலைப்பிரசங்கத்தில் கிறிஸ்தவர் களைக் குறிக்கப்பயன்படுத்திய வார்த்தைகளான, இவ்வுலகத்தின் உப்பு என்ற பதங்களைச் சுட்டிக் காட்டினோம். அப்பதங்களோடேயே இவ்வேத சிந்தனைகளை நாம் நிறைவு செய்வோம். பத்துக் கட்டளைகளையும், அவற்றின் அதிகாரத்தையும் பற்றிய போதனைகள் சோர்வளிப்பதாக வெளிப் படையாகக் காட்டிக்கொள்வதை இக்காலத்தில் பலர் அலங்காரமாகக் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய எண்ணங்களின் பிரதிபலிப்பை இன்று சமுதாயத்தில், உடைந்து நொருங்கிக் கொண்டிருக் கும் குடும்ப வாழ்க்கைகளிலும், பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளி லும் மாணவர்களிடம் கூச்சல்களி லும், கூத்துக்களிலும் நம்மால் பார்க்க முடிகின்றது. ஆகவே, இன்றைய கிறிஸ்தவன் பத்துக்கட்டளைகளுக்கு அதிக மதிப்பளித்து, மிகக்கவனத் தோடு அவற்றைத் தன் வாழ்க்கை யிலும், ஏனையோருடைய வாழ்க்கை யிலும் கடைப்பிடிக்க வேண்டும். தேவனின் கட்டளைகள் நன்மை யானவையாக இருப்பதால், அவற்றை க்கடைப்பிடிப்பவர்களுக்கு அவை நன்மையைத் தவிர வேறொன்றை யும் செய்யா. அதேவேளை அவற்றை உதாசீனம் செய்பவர்கள் தங்கள் வாழ்க்கையில் பிரச்சனைகளையும், போராட்டங்களையும், துன்பங்களை யுமே அறுவடை செய்ய நேரிடும். நமது நாட்டில் கருத்தடையின் மூலம் கொலை செய்யப்பட்டும் அத்தனைக் குழந்தைகளும் வாயிருந்து பேசுமானால் இதனையே சொல்லும். சட்டத்திற்கு மதிப்பளிக்காத நமது சமுதாயத்தின் ஒவ்வொரு பகுதியும், பாவி களின் வழிகள் கடினமானவை என்றே அறிக்கை யிடுகின்றன. மாம்சப்பிரகாரமாக நாம் வாழ முற் பட்டால் நிச்சயமாக நாம் இறப்போம். பரிசுத்த மான தேவனைக்கொண்டிருப்பவர்கள் அடாவடித் தனமான வாழக்கையை வாழ்வதில்லை.

> **பரிசுத்தமான தேவனைக் கொண்டிருப்பவர்கள் அடாவடித்தனமான வாழக்கையை வாழ்வதில்லை.**

கிறிஸ்தவ விசுவாசத்தைப்பற்றி மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்வது நன்மையானதும், மிக மிக அவசியமானதுமாகும். ஆனால், பரிசுத்தமான வாழ்க்கையைக் கொண்டிராமல் வெறும் பேச்சை மட்டும் கொண்டிருந்தால் அது நம்மைச் சுற்றி யுள்ள உலகத்திற்கு எந்தப்பயனையும் அளிக்காது. நமது சமுதாயத்து மக்கள் சந்தோஷத்தை அறியாத வர்களாகவும், நம்பிக்கையற்றவர்களாகவும் இருக்கி றார்கள். ஆகவே, பிரசங்கமும், சுவிஷேச ஊழியமும் இன்று மிக அவசியமானவையாக உள்ளன. ஆனால், தேவனின் பத்துக்கட்டளைகளிலும்,

பரிசுத்த வாழ்க்கையிலும் உண்மையான அன்பைக் கொண்டு இவற்றை செய்யாவிட்டால் இவற்றால் எந்தப்பயனுமில்லை. தேவகட்டளைகளுக்கு முரணான கிறிஸ்தவம் கர்த்தருக்கு முன்னால் மெய்யான கிறிஸ்தவமல்ல. இன்று நமக்குத்தேவை அதிக பிரசங்கிகளும், சுவிஷேச ஊழியர்களும் மட்டுமல்ல, பரிசுத்தமானவர்களும்தான். நமது சபைகளில் இன்று இவர்களை அதிகமாகக் கொண்டிருந்தால் நிச்சயமாக ஆசீர்வாதமும், வளர்ச்சியும் தானாகவே வரும். ஆனால், உப்பு தனது சாரத்தை இழக்குமானால் - எது மிஞ்சும்?

# விமர்சனத் துணுக்குகள் . .

பெனிஹின்னின் போலிப் போதனைகள் இன்று எல்லை கடந்து போய்க் கொண்டிருக்கின்றன. கிறிஸ்து கல்வாரியில் சிந்திய இரத்தம் விசுவாசிகளுக்கு இரட்சிப்பை மற்றும் அல்லாமல் சரீர சுகத்தையும், வாழ்க்கை வசதிகளையும்கூடப் பெற்றுத் தந்திருப்பதாக போதிக்கும் இம்மனிதர் தனது ஊழியங்களுக்குப் பணம் கொடுப்பவர்களைக் கர்த்தர் பெருமளவில் ஆசீர்வதிப்பார் என்று கூறி, தொடர்ந்து மக்களை ஏமாற்றி வருகிறார். தன்னை டெலிவிஷனில் பார்ப்பவர்கள் கடவுளின் ஒரு பகுதியைத் தன்னில் பார்ப்பதாக பெனிஹின் கூறியதை இவ்விதழாசிரியர் தன் காதாலேயே கேட்டுள்ளார். பேனர் ஓப் டுருத் என்ற ஆங்கில, கிறிஸ்தவ மாத இதழில் சமீபத்தில் வந்துள்ள ஒரு கட்டுரை பெனிஹின் எத்தனை ஆபத்தான மனிதர் என்று எடுத்துக் காட்டுகின்றது. தன்னைக் கடவுளாக காட்டிக் கொள்ளும் மாயமான்களைப் பின்பற்றிக் கிறிஸ்தவ சமுதாயம் தொடர்ந்து சீரழிந்து கொண்டிருக்கும் நாட்கள் இவை. பெனிஹின் மற்றும் அவரைப்போன்ற ஏனைய போலி மனிதர்களுக்குத் துதிபாடி வீண் போய்க் கொண்டிருக்கும் சபைத்தலைவர்களும், கிறிஸ்தவ அன்பர்களும் இனியாவது சிந்தித்து வேதம் போதிக்கும் கிறிஸ்தவத்தைப் பின்பற்றி தேவனை மகிமைப்படுத்துவார்களா?

திராவிட சமயங்களான சைவம், சாக்தம், வைஷ்ணவம், காணாபத்தியம் போன்றவை திராவிட கலாச்சாரத்திற்கேற்ற உருவில் காணப்படும் கிறிஸ்தவமே, என்ற போலிப்போதனையை அரசியல், சமுதாய நோக்கங்களுககாக பரப்பி வரும் புலவர் தெய்வ நாயகம் இன்று இணையத்திலும் (Internet) தனது போதனைகளை ஆங்கிலத்தில் வெளியிட்டு வருகிறார். மடாதிபதிகளுக்கும், ஆதீனகர்த்தாக்களுக்கும் எதிராகப் போராட வேண்டும் என்று திராவிட சமுதாயத்தைத் தூண்டும்விதத்தில் எழுதிவரும் இம்மனிதருக்கும் வேதபூர்வமான கிறிஸ்தவத்திற்கும் எந்தச் சம்பந்தமும் இருக்க முடியாது என்பது நம் வாசகர்கள் அறியாத உண்மையல்ல. இத்தகைய போதனைகளால் கிறிஸ்தவத்திற்கு இழிவைத் தேடித்தரும் முயற்சிகளை பிசாசு ஊக்கத்துடனேயே செய்துவருகிறான். மேலை நாடுகளில் வாழ்ந்து வரும் தமிழ் மக்கள் மத்தியிலும், கிறிஸ்தவ சபைகளிலும் தெய்வநாயகம் இப்போதனைகளைப் பரப்ப முயற்சி எடுத்து வருகிறார். வேதபூர்வமாக சிந்தித்து வாழ மறுக்கும் மக்கள் கூட்டம் இருக்கும்வரையில் தெய்வநாயகம், சாது செல்லப்பா போன்ற சந்தர்ப்ப வாதிகள் இவ்வுலகில் தோன்றிக் கொண்டிருப்பதை எவராலும் தடை செய்ய முடியாது.



## மொரிஸ் ரொபட்ஸ்

இவ்விதழில் "உப்பு தன் சாரத்தை இழந்தால்" என்ற தலைப்பில் தேவ செய்தியை அளித்துள்ள மொரிஸ் ரொபட்ஸ் ஸ்கொட்லாந்தில், இன்வர்நஸ் என்னுமிடத்தில் திருச்சபைப் போதகராகப் பணிபுரிவதுடன் ஆங்கிலத்தில் வெளிவரும் பெனர் ஒப் டுருத் கிறிஸ்தவ இலக்கிய மாத இதழின் ஆசிரியராகவும் இருந்து வருகிறார். அச்சஞ்சிகையில் வெளிவந்த, இவரது தலைப்புக் கட்டுரைகள் தொகுக்கப்பட்டு "தேவனைப்பற்றிய எண்ணம்" என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன.

# கிறிஸ்தவக் கோட்பாடுகள்

***கேள்வி 38**: கிறிஸ்துவின் மரணத்தின் மூலம் விசுவாசிகள் அடையும் பயன்கள் யாவை?*

***பதில்**: பூரணமான பரிசுத்தத்தை அடைந்த விசுவாசி களின் ஆவி மரணத்தின் பின் உடனடியாக மகிமையை அடைகின்றன; கிறிஸ்துவுடன் தொடர்ந்தும் இணைக்கப்பட்டுள்ள அவர்களது சரீரங்கள் உயிர்தெழுதல்வரையும் கல்லறையில் அயர்ந்திருக்கின்றன.*

*எபிரேயர் 12:23; 2 கொரி. 5:1, 6, 8; பிலிப். 1:23; 1 தெசலோ. 4:14; ஏசாயா 57:2; யோபு 19:26-27; 1 தெசலோ. 4:16.*

**விளக்கக்குறிப்பு:** *இவ்வினா மனிதனுடைய இடைக்கால நிலைமையைப்பற்றிப்* (Intermediate State) *போதிக்கிறது. மனிதன் இறந்தவுடனேயே தனது இறுதிநிலைமையை அடைவதில்லை. அதுமட்டுமல்லாமல், அவன் தொடர்ந்து தானிருந்த நிலைமையிலேயே இருப்பதுமில்லை. ஆகவே, இறப்பில் அவனுள்ள நிலையை இடைக்கால நிலைமை என்று அழைக்கிறோம்.*

*தேவன் மனிதனைப்படைத்தபோது அவனை ஆவியுடனும், சரீரத்துடனும் படைத்தார். மனிதன் இறக்கும்போது அவனது ஆவியும் சரீரமும் பிரிக்கப்படுகின்றது. மனிதன் இறந்தபின் அவனுடைய சரீரம் மண்ணை அடைகின்றது உருமாறிப்போகின்றது (ஆதி. 3:9; அப்போஸ். 13:36). ஒரு மனிதன் விசுவாசியாக இருந்தாலும் இல்லா விட்டாலும் அவனுடைய சரீரத்திற்கு இந்நிலைமையே ஏற்படுகின்றது. ஆனால், விசுவாசியைப் பொறுத்தவரையில் அவனுடைய ஆவி பரிசுத்தமடைந்து மகிமையை நோக்கிப் போகின்றது (லூக்கா 23:43; வெளி. 14:13; லூக்கா 16:19-31). ஆனால், அவிசுவாசிகளின் ஆவி உடனடியாகவே நரகத்தின் கொடுமையை அனுபவிக்கத்தொடங்குகின்றன. ஆகவே, விசுவாசி களையும் அவிசுவாசிகளையும் பொறுத்தவரையில் இவ்விடைக்காலப்பகுதியில் அவர்களுடைய சரீரத்திற்கு ஒரே நிலைமை ஏற்பட்டபோதும், அவர்களுடயை ஆவிகள் வெவ்வேறு இடங்களை அடைகின்றன. (இறப்பின் பின் அவிசுவாசிகளின் சரீரம் மண்ணை அடைந்தபோதும் தேவன் அதை நியாயத்தீர்ப்பின் நாளுக்காகப் பாதுகாக்கிறார்).*

*வேதம் போதிக்கும் இத்தகைய உண்மைகளை மனதில் கொண்டு நாம் இன்று பரவலாக உலவி வரும் போலிப்போதனைகளை நிராகரிக்க வேண்டும். இத்தகைய இரண்டுவிதப் போலிப் போதனைகளை நாம் அடையாளங்கண்டு ஆராய்வோம்.*

*(1) முதலாவதாக சிலர், இறப்பின் பின் நமது ஆவி இருள்சூழ்ந்த, உணர்வற்ற ஒரு நிலையை அடைவ தாகப் போதிப்பர். உயிர்த்தெழுதல் நிகழும்வரை யில் இத்தகைய நிலைமையிலேயே மனித ஆவி இருப்பதாக இவர்கள் கூறுவார்கள். வேதம் மனிதனின் (விசுவாசியின்) இறப்பைப்பற்றிக் குறிப்பிடும்போது அவன் உறக்க நிலைமையை அடைவதாகக் கூறுவதற்குக் காரணமுண்டு. ஏனெ னில், உறக்கத்திற்கும், மரணத்திற்கும் இடையில் காணப்படும் சில பொதுவான தன்மைகள் காணப்படுகின்றன. (அ). மனிதன் இறந்தபின் உறங்குவதுபோல் தோற்றமளிக்கிறான். உறங்குகிற மனிதன் இறந்ததுபோலவும், இறந்த மனிதன் உறங்குவது போலவும் தோற்றமளிக்கிறான். (ஆ). அத்தோடு, இறந்தபின் மனிதனுக்கு உலகத்தில் நிகழும் காரியங்களைப்பற்றிய உணர்வு இருப்ப தில்லை. அதேபோல், உறக்கத்திலிருப்பவனுக்கும் அவனைச்சுற்றி நடக்கும் காரியங்களைப் பற்றிய உணர்விருப்பதில்லை. (இ). உறங்குகிற மனிதன் கனாக்காண்பதுபோல், இறந்தபின் விசுவாசி யினுடைய ஆவி உணர்வுடையதாக இருக்கின்றது. இக்காரணங்களால் நாம் கிறிஸ்தவர்கள் அல்லாத வர்களுடைய போதனையான இறந்தபின் நமது ஆன்மா இருளானதும், உணர்வற்றதுமான நிலைமையில் இருக்கின்றதென்ற போதனையை நிராகரிக்கிறோம்.*

*(2) அதேவகையில் ரோமன் கத்தோலிக்க மதத்தின் போதனையையும் நாம் நிராகரிக்கிறோம். ரோமன் கத்தோலிக்க மதம் விசுவாசிகள் இறந்தபின் ஓர் இடைத்தர நிலைமையை அடைவதாகவும், இவ்விடம் பரலோகமோ அல்லது நரகமோ அல்ல என்றும் கூறுகிறார்கள். இவ்விடத்தில் விசுவாசிகள் தாம் பரிசுத்தமடையும்வரையில் தங்களுடைய பாவத்திற்கான தண்டனையை அனுபவிப்பார்கள் என்றும் இம்மதம் போதிக்கின்றது. அத்தோடு, சிலர் இவ்விடத்தில் அதிக காலம் இருக்கவும் நேரிடும் என்றும் கூறுகிறார்கள். அதேநேரம், இங்கிருப்பவர்களுக்காக உலகத்தில் இருக்கும் அவர்களுடைய உறவினர்களும், நண்பர்களும் செய்யும் ஜெபம் மற்றும் நல்ல காரியங்கள்*

இவர்களுடைய துன்பங்களைக் குறைக்க உதவும் என்றும் போதிக்கிறார்கள். இப்போதனைகள் வேதத்திற்கு முற்றிலும் விரோதமானவை. கிறிஸ்து மட்டுமே பாவிகளுடைய பாவநிவாரணத்திற்கான அனைத்துத்துன்பங்களையும் தாங்கி கல்வாரியில் மரித்தார். அவரால் மட்டுமே பாவிகளுக்கு மன்னிப்பு வழங்க முடியும். விசுவாசிகளுடைய அனைத்துப்பாவங்களுக்காகவும் கிறிஸ்து பூரணமாக மரித்திருப்பதால், விசுவாசிகள் தங்களுடைய பாவத்திற்கான முழு விடுதலையையும் கிறிஸ்துவுக்குள் பெற்றுள்ளார்கள். ரோமன் கத்தோலிக்க மதம் போதிப்பதுபோல் இறக்கும் விசுவாசிகள் பரலோகம் போகாமல் இடைப்பட்ட ஓரிடத்தில் துன்பப்படுவதில்லை.

நமது சரீரத்தை நாம் அலட்சியப்படுத்தக்கூடாது. ஆவி மட்டுமே முக்கியமானது என்ற எண்ணத்தில் பலர் சரீரத்தை முற்றும் அலட்சியப்படுத்துகிறார்கள். இதனாலேயே விசுவாச அறிக்கை இறந்த பின்பும் விசுவாசியினுடைய சரீரம் கிறிஸ்துவுடன் இணைக்கப்பட்டுள்ளதாகப் போதிக்கின்றது. அதாவது, ஆவியே முக்கியமென்ற எண்ணத்தில் நமது சரீரத்தை அவர் மறந்துவிடவில்லை என்பதே இதன் பொருள் (யோபு 19:26; யோவான் 5:29, 29).

இவிடைத்தர நிலைமையை நாம் நமது இறுதி நிலைமையாகக் கருதிவிடக்கூடாது. பவுல், 2 கொரி. 5:1-8 வரையிலான வேதப்பகுதிகளில் இந்நிலைமையைப் பற்றிக்கூறும்போது, போர்வையைக்களைந்து போடுவது போலும், நிர்வாணிகளாய் இருப்பது போலுமானது என்று விளக்குகிறார். பவுல் இவ்விடைத்தர நிலைமையை அடைவதற்கு, அதாவது, இவ்வுடலை விட்டுவிலகி பரலோகம் போவதற்கு விருப்பப்பட்டபோதும், தனது போராவல், "மரணமானது ஜீவனாலே விழுங்கப்படுவதற்காகப் போர்வை தரித்தவர்களாயிருக்க வேண்டுமென்பதே" என்று கூறுகிறார். ஆகவே, விசுவாசிகள் இவ்விடைத்தர நிலைமையை அடைவதை பெரிதாகக்கருதாமல், இதைத்தமது இறுதி நிலைமையை அடைவதற்கான ஒரு படிக்கல்லாகவே கருதுகிறார்கள் (ரோமர் 8:23).

பாவத்தின் கூலியாக மரணம் இருக்குமானால், விசுவாசிகள் தங்கள் பாவங்களுக்கான மன்னிப்பைப்பெற்ற பின்பும் மரிக்க வேண்டியதன் அவசியமென்ன? என்ற வினா அடிக்கடி கேட்கப்படுவதொன்றாகும். இதைப்புரிந்து கொள்வதற்கு இதுபற்றி வேதம் போதிக்கும் சில உண்மைகளை மனத்தில் கொள்ள வேண்டும். 1. ஒரு நாள் மரணம் விசுவாசிகளின் மேல் தான் கொண்டுள்ள வல்லமையை பூரணமாக இழக்கும் (1 கொரி. 15:26). எல்லா விசுவாசிகளும் அதன் பிடியில் இருந்து முற்றாக விடுவிக்கப்படுவர் (1 கொரி. 15:54). 2. ஆனால், விசுவாசிகளைப் பொறுத்தவரையில் மரணம் இப்போதும் தன் கூரை இழந்து நிற்கிறது. கிறிஸ்துவை விசுவாசிக்கும் மனிதனை மரணம் துன்புறுத்த முடியாது (1 கொரி. 15:55, 56). 3. மரணம், இப்போதும் நம்மை பயமுறுத்தும் ஒரு எதிரியாக இருந்தபோதும் தேவன் அதனை நன்மைக்காக பயன்படுத்திக் கொள்கிறார் என்று வேதம் போதிக்கிறது தமது பரிசுத்த வாழ்க்கையின் வளர்ச்சிக்காக சாதாரணமாக இவ்வுலகில் எல்லாக்கேடுகளையும் அனுபவிக்க வேண்டிய விசுவாசிகள் மரணத்தையும் அனுபவிக்க வேண்டும். 4. இவையனைத்தையும் விட இன்னுமொரு உண்மை நாம் இதனைப்புரிந்து கொள்ள உதவும். அதாவது, பாவத்தினாலேயே மரணம் சம்பவித்தது. மனிதன் தான் மூச்சு விடுவதை நிறுத்தும்போதே மரணம் சம்பவித்ததாக நாம் நினைக்கக்கூடாது. தான் செய்த பாவத்தின் கூலியாகவே மனிதன் மரணத்தையும் அதன் கொடூரத்தையும் அனுபவிக்கிறான் (ஆதி. 2:17; ரோமர் 5:12). ஆனால், தேவன் தனது கிருபையால் அவனை இரட்சித்து அதிலிருந்து விடுதலை அளிக்கிறார். (அதாவது, விடுதலை அடைந்த மனிதன் இறக்க வேண்டியது இயற்கையானாலும் மரணம் அவிசுவாசியைத் துன்புறுத்துவதுபோல் விசுவாசியைத் துன்புறுத்தாது.) இதனாலேயே நாம் இரட்சிப்படையும் அனுபவத்தை மரணத்திலிருந்து விடுதலை அடைந்து ஜீவனைப்பெறுவதுபோல் (1 யோவான் 3:14) வேதம் சித்தரிக்கிறது. தேவன் இரட்சிப்பின்போது நமது ஆவியை மரணத்தின் பிடியில் இருந்து விடுவித்ததுபோல், உலக முடிவுக் காலத்தில் நமது சரீரத்தையும் மரணத்தின் பிடியில் இருந்து முற்றாக விடுவிப்பார் (யோவான் 5:25-29). நமது சரீரத்தை தேவன் இன்னும் மரணத்தின் பிடியில் இருந்து முற்றாக விடுவிக்கவில்லை. அவிசுவாசிகளோடு சேர்ந்து இவ்வுலகில் நாமும் மரணத்தை சந்தித்தேயாக வேண்டும். இதன் மூலம் தேவனின் திட்டங்களை இவ்வுலகில் நிறைவேற்றுகின்றார். அவர் தன்னால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை தம்முடன் அழைத்துக்கொள்ளும் இறுதிக்காலம் வரும்போதே மரணம் முற்றாக அழிக்கப்படும்.


## இரு புதிய நூல்கள்

**கிறிஸ்தவன் யார்? - அல்பர்ட் என். மார்டின் NZ $1.00**

**உப்பு தன் சாரத்தை இழந்தால் - மொரிஸ் ரொபட்ஸ் NZ $1.00**

*ஆறு பிரதிகளுக்கு தபால் செலவு NZ$2.00. பிரதிகளுக்கு இவ்விதழின் முகப்பட்டையின் உட்புறத்தில் கொடுக்கப் பட்டுள்ள முகவரிக்கு எழுதவும்.*



# வில்லியம் கேரி

**வில்லியம் கேரி**

***கர்த்தரிட மிருந்து பெருங் காரியங் களை எதிர் பாருங்கள்; கர்த்தருக் காகப் பெருஞ் சாதனை களைச் செய்யுங் கள்***

**கர்த்தருக்காக ஆத்துமாக்கள்**

கடந்த இதழில் கேரியின் முப்பது வருடகால பேராசிரியர் பணியைக்குறித்தும், பல மொழிகளில் அவர் ஆற்றிய இலக்கியப்பணியைக்குறித்தும் பார்த்தோம். அதேவேளை கேரியின் இப்பணிகள் அவர் செய்த ஏனைய ஊழியங்கள் அனைத்திற்கு மத்தியிலும் நடந்து வந்ததை நாம் மறந்துவிடக் கூடாது. செராம்பூர் மிஷனரி ஊழியம் எந்தவகையில் கர்த்தரால் ஆசீர்வதிக்கப் பட்டது என்பதைப்பார்க்க நாம் இப்போது சிறிது பின்நோக்கிப் போய் செராம்பூர் ஊழியத்தின் இரண்டாம் வருடத்தைப்பார்ப்போம்.

ஏற்கனவே நாம் கிருஷ்ணபால் கர்த்தரை அறிந்து கொண்டவிதத்தைப்பற்றிப் பார்த்துள்ளோம். கிறிஸ்து மேல் தான் கொண்டிருந்த விசுவாசத்திற்காக கிருஷ்ணபால் பல துன்பங்களை வாழ்க்கையில் அனுபவிக்க நேர்ந்தது. பதின்மூன்று வயதே நிரம்பியிருந்த கிருஷ்ணபாலின் மூத்த பெண்ணான கோலொக்கிற்கு மோகன் என்பவனுடன் திருமணம் நிச்சயமாயிருந்தது. இது கிருஷ்ணபால் கர்த்தரை அறிந்து கொள்ளும் முன்னர் நடந்த காரியம். ஆனால், கோலொக் கிறிஸ்துவை அறிந்து கொண்டபின் இத்திருமணத்தை விரும்பவில்லை. கிருஷ்ணபாலாலும் சட்டரீதியாக இத்திருமணத்தை நிறுத்த முடியவில்லை.

ஒரு நாள் மோகன் ஆட்களுடன் வந்து கேலொக்கை அவளது வாயில் துணியை அடைத்து கல்கத்தாவிற்கு கடத்திக்கொண்டு போனான். பின் தொடர முற்பட்ட கிருஷ்ணபாலை மோகனின் அடியாட்கள் கொடூரமாகத் தாக்கினர். கல்கத்தா போலீஸில் கோலொக், தான் கிறிஸ்துவை பின்பற்று வதால் மோகனுடன் வாழ விரும்பவில்லை என்று கூறினாள். இதை கல்கத்தா கோர்டிலும் கூறித்தனது விடுதலைக்காக வாதாடினாள். ஆனால், அவளது வாதங்கள் ஒன்றும் எடுபடவில்லை. வாழ்ந்தாலும், இறந்தாலும் தான் கிறிஸ்துவுக்காக மட்டுமே வாழ்வேன் என்று உறுதியெடுத்த கோலொக் மோகனுடன் வாழ மறுத்தாள். மோகனாலும் அவளது உறுதியைக்குழைக்க முடியவில்லை. கணவனுடன் சமாதானமாக வாழ்ந்து அவனது மனத்தைத் திருத்த முயற்சி எடுக்கும்படி கேரி அவளுக்குப் புத்திமதி கூறினார். அவளுடைய வீட்டுக்குத் தைரியமாகப்போய் மோகனுடன் பேச முயன்ற கேரியை ஒரு கூட்டம் சுற்றி வளைத்தது. கேரி அதிசயவசமாக அக்கூட்டத்திட மிருந்து உயிர் தப்பினார்.

இயற்கையிலேயே ஆத்திரப்படும் குணத்தைக்கொண்டிருந்த கிருஷ்ணபால் இத்தனைக்கும் மத்தியிலும் அமைதியாக இருந்தார். கிறிஸ்து அவர் வாழ்வில் பெருமாற்றத்தைக்கொண்டு வந்திருந்தார். கிறிஸ்துவுக்காக உழைப்பதிலும், அவரைப்பற்றி எடுத்துக்கூறுவதிலும் கிருஷ்ணபால் அதிக சிரத்தை காட்டி னார். தனது வீட்டிற்கு பக்கத்தில் நாற்பது பேர் அமருமளவிற்கு ஒரு கூடாரத்தைக்கட்டி தனது பக்கத்து வீட்டாருக்கு கிறிஸ்துவைப்பற்றி எடுத்துக் கூறினார். வங்காள மொழியில் கீர்த்தனைகளை எழுதிப்பாடி மற்றவர்களை யும் பாடுமாறு செய்தார். ஹிந்துஸ்தானி, வங்காள மொழிகளில் பாண்டித் தியம் பெற்றிருந்த கிருஷ்ணபால் பெனாரஸ், அலகாபாத் போன்ற இடங்

களுக்கும் போய் கிறிஸ்துவின் சுவிஷேசத்தைப் போதித்தார். கிருஷ்ணபாலின் பிரசங்கத்தின் ஒரு பகுதியைப் பார்ப்போம்.

> இந்து ஆராதனை முறைகளை நான் இதுவரை பின்பற்றினேன். கங்கையில் முழுகினேன். பேச முடியாத ஊமைகளான கடவுளர்களை வணங்கினேன். எண்ணிக்கையில்லாத சாமியார்களின் கால்களில் வீழ்ந்து வணங்கியிருக்கிறேன். எனது குல தெய்வத்தின் பெயரை அன்றாடம் சொல்லி வந்திருக்கிறேன். ஆனால் இவையெல்லாமே எனது பாவத்திலிருந்து எனக்கு விடுதலையை அளிக்க வில்லை. அப்போதே நான் கிறிஸ்துவைப்பற்றிக் கேள்விப்பட்டேன். இவ்வுலகில் பிறந்து மனிதர்கள் மத்தியில் வாழந்து இறுதியில் தன்னையே அவர்களுக்காகப் பழி கொடுத்தார் கிறிஸ்து. எத்தகைய அன்பு இது என்று எண்ணிப் பார்த்தேன். துர்க்கையோ, காளியோ, கிருஷ்ணனோ பாவிகளுக்காக இத்தகைய அன்பைக் காட்டவில்லையே? சாமியார்கள் தங்கள் கால்களைக் கட்டிக்கொண்டு கீழே அமர்ந்திருக்கும் வேளையில், கிறிஸ்து தனதுசீடர்களின் கால்களைக்கழுவியுள்ளார். இத்தகைய தாழ்மையை வேறு எங்கே பார்க்க முடியும்?

கிருஷ்ணபாலோடு அவரது மனைவியும், மனைவியின் தங்கையான ஜெயமணியும், அன்னாடா என்ற விதவையும் சேர்ந்து பக்கத்துவீட்டுப்பெண்களுக்கு கிறிஸ்துவைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். இம்மூன்று பெண்களும் இணைந்து கிறிஸ்துவிற்காக ஊக்கத்தோடு உழைத்தனர். கேரி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கிருஷ்ணபால் வீட்டில் அவர்களுக்கு வேதத்தைப் போதித்தார். ஞாயிறு தினங்களில் கிருஷ்ணபாலின் வீட்டில் வங்காள மொழியில் போதனையும் நடந்தது. கிருஷ்ணபாலின் முழுக் குடும்பமும் பக்கத்து வீட்டாரும் இதில் கலந்து கொண்டனர். அவர்கள் எல்லோருமே கிருஷ்ணபால் வங்காள மொழியில் இயற்றி இருந்த கீர்த்தனைகளைப் பாடி மகிழ்ந்தனர்.

கோலொக்ஜ மோகன் தொடர்ந்து மோசமாக நடத்தி வந்தான். அது தாங்காமல் கோலொக் கிருஷ்ணபாலின் வீட்டிற்கே வந்துவிட்டாள். அங்கே ஆவிக்குரிய வாழ்வில் அவள் வளர்ந்தாள். வெகு சீக்கிரமே முழுக்கு ஞானஸ்நானத்திற்கும் தன்னை ஒப்புக் கொடுத் தாள். கிருஷ்ணபாலின் வீடு பலருடைய ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சிக்கும் பெருந்துணையாக இருந்தது.

கிருஷ்ணபாலும் கோலொக்கும் கிறிஸ்துவை அறிந்து கொண்டு தங்களுடைய சாதியைத் துறந்தபோது அதைப்பார்த்து பலரும் ஆச்சிரியப்பட்டாலும் அது அதிக நாட்களுக்கு நிலைக்காது என்று எண்ணி உதாசினப்படுத்தினார்கள். ஆனால், செராம்பூர் மிஷனரி ஊழியத்தின் மூலம் பல பிராமணர்களும், வேறு சாதிக்காரர்களும், இஸ்லாமியர்களும் கூட கர்த்தரை அறிந்து கொண்டனர். இவர்கள் தங்கள் சாதியையும், வழிபாட்டு முறை களையும் தூக்கி எறிந்துவிட்டு தேவனுடைய சபைக்குத்தம்மை ஒப்புக் கொடுத்தனர். செராம்பூர் மிஷனரிகள் வெளியிட்டிருந்த ஒரு நற்செய்தித்துண்டுப் பிரசுரத்தை வாசித்த பிட்டம்பர் சிங் என்ற அறுபது வயது நிரம்பிய ஒரு மனிதர் முப்பது மைல்கள் நடந்து செராம்பூரை அடைந்து கர்த்தரை அறிந்து கொண்டார். இவ்வாறு கிறிஸ்துவைப் பற்றி அறிந்து கொண்ட மனிதர்கள் தங்கள் சாதியைத்தூக்கி எறிந்தபோது பல இனத்தவர் களும் கிறிஸ்துவுக்குள் ஒரு குடும்பமாக வாழ முடிந்தது. இத்தகைய ஓர் இன ஒற்றுமையை வங்காளம் என்றுமே பார்த்ததில்லை.


அதேவேளை அவர்கள் அதிக எதிர்ப்பையும் துன்பங்களையும் வாழ்வில் அனுபவிக்க நேர்ந்தது. கிருஷ்ண பிரசாத் என்பவரும், ராம் ரத்தன் என்பவரும் வீதியில் பிரசங்கிக்க முற்பட்டபோது பலரால் தாக்கப்பட்டனர். வீட்டுச்சொந்தக்காரர்களும், வியாபாரிகளும் இவர்கள் கிறிஸ்தவர்கள் என்பதால் இவர்களுக்கு உதவி செய்ய மறுத்தனர். சயாம் தாஸ் என்ற மனிதர் திருமுழுக்குப் பெற்ற ஒன்பது மாதங்களில் கொலை செய்யப்பட்டார். பலர் தங்களுடைய வீடுகளில் இருந்து விரட்டி அடிக்கப்பட்டனர்.

இதைவிட செராம்பூர் மிஷனரிகளுக்கு அதிக மனத்துன்பத்தை அளித்தது கிருஷ்ண பாலின் வீட்டாரது நடத்தையே. கிறிஸ்தவர்களாக இருந்தபோதும் இவர்களுடைய வாழ்க்கையில் அதிக திருத்தம் தேவையாக இருந்தது. புறம் பேசுதல், சண்டை பிடித்தல் போன்ற அநேக ஒழுக்கரீதியான காரியங்களுக்காக இவர்களைக் கண்டித்துத் திருத்த வேண்டியிருந்தது. கிறிஸ்து தனது சீடர்களின் நிலைக்காக வருந்தியது போலும், பவுல் கொரிந்தியர்களுக்காக மனத்துன்பம் அடைந்தது போலும் போதகரான கேரி தனது மக்களின் நிலைக்காக வருத்தப்பட்டார். இவர்கள் கிறிஸ்தவ வாழ்க்கையில் மிகவும் குழந்தைப் பருவத்தில் இருந்தனர். அதிக பொறுமையோடு இவர்களை வளர்த்தெடுக்க வேண்டியிருந்தது.

**“இந்து ஆராதனை முறைகளை நான் இதுவரை பின்பற்றி னேன். கங்கையில் முழுகினேன். பேச முடியாத ஊமைகளான கடவுளர்களை வணங்கினேன். எண்ணிக்கை யில்லாத சாமி யார்களின் கால்களில் வீழ்ந்து வணங்கி யிருக்கிறேன். எனது குல தெய்வத் தின் பெயரை அன்றாடம் சொல்லி வந்திருக் கிறேன். ஆனால் இவை யெல்லாமே எனது பாவத்தி லிருந்து எனக்கு விடுதலையை அளிக்க வில்லை.”**

***கிருஷ்ணபால்***

# நீ கற்று நிச்சயித்துக் கொண்டவைகளில் நிலைத்திரு!


அட்டைப்படம்

கிறிஸ்தவ விசுவாசம் என்பது மனத்தால் சிந்தித்துப்புரிந்து கொள்ளக்கூடியது. அதை நாம் நமது மொழியில் விளக்கிக்கூற முடியும். அதே நேரம், அது அனுபவபூர்வமானது. விசுவாசத்தைப் பற்றி வேதத்தில் இவ்வாறுதான் வாசிக்கிறோம். விளக்கிக்கூற முடியாததும், சிந்தித்துப்புரிந்து கொள்ள முடியாததும், வாழ்க்கையில் அனுபவிக்க முடியாததும், விசுவாசமாக இருக்க முடியாது. இன்று அநேகர் விசுவாசம் என்ற பெயரில் போலிக் கொள்கைகளைப் போதித்துக் கொண்டிருக்கின்றனர். இது ஏதோ மனத்தால் புரிந்து கொள்ள முடியாத ஒரு மாயாஜால வித்தைபோல் பலருக்குப்படுகிறது. இப்படிப்பேசுகிற பலரை நான் அடிக்கடி சந்தித்திருக்கிறேன்.

நமது விசுவாசத்தில் நாம் நிலைத்திருக்க வேண்டுமானால் வேத ஞானம் நமக்கு அவசியம். நமது சபை மக்கள் விசுவாச வாழ்க்கையில் வளர வேண்டுமானால் அவர்கள் வேத அறிவில் வளர வேண்டும். நாம் வேதத்தை முறையாகப் போதிக்க வேண்டும். வேதப்போதனைகளை அனைவரும் வாழ்க்கையில் நடைமுறையில் கடைப்பிடிக்க வேண்டும். இவையில்லாமல் விசுவாச வாழ்க்கையில் வளர்ச்சி இருக்க முடியாது. விசுவாசம் கண்மூடித்தனமானதொன்றல்ல. அது சிந்தனைபூர்வமானது. வேதஞானமில்லாத இடத்திலும், வேதப்போதனைகளைக் கடைப்பிடிக்காதவர்களிடத்திலும் உண்மையான விசுவாசம் இருக்க முடியாது. எங்கு உண்மையான விசுவாசம் இருக்கிறதோ அங்கே வேதத்திற்கு அதிக மதிப்பிருக்கும்.

இதனால்தான் பவுல் தீமோத்தேயுவைப்பார்த்து நீ கற்று நிச்சயித்துக்கொண்டவைகளில் நிலைத்திரு என்று கூறுவதைப் பார்க்கிறோம். இதை இன்னுமொருவிதத்தில் கூறப்போனால் விசுவாசத்தில் நீ நிலைத்திரு, என்று பொருளாகும். வேதத்தில் நிலைத்திருப்பதே விசுவாசத்தில் நிலைத்திருப்பதாகும். வேதத்திற்கு சமாதி கட்டிவிட்டு விசுவாச வாழ்க்கை வாழ முனையும் கூட்டத்தார் இதை இன்று நினைத்துப்பார்ப்பது நல்லது.

தீமோத்தேயு ஒரு உண்மையான விசுவாசியாகவும் போதகனாகவும் இருக்க அவன் வேதத்தில் கற்று நிச்சயித்துக்கொண்ட காரியங்களே அவனுக்குத் துணை புரியும். அவற்றை அவன் தன் தாயாரிடத்திலும், பாட்டியிடத்திலும், பவுலிடத்திலும் முறையாகக் கற்றிருந்தான். அவற்றை அவன் மறந்துவிடக்கூடாது என்றும், அவற்றில் நிலைத்திருந்து தொடர்ந்து போதித்து வரவேண்டுமென்றும் பவுல் போதிக்கிறார். தீமோத்தேயு மட்டுமல்ல, அவனது மக்களும் விசுவாசத்தில் வளர இது மட்டுமே உதவும்.

தீமோத்தேயு ஒரு போதகன். அவனுக்கே இவ்வேத போதனைகள் இத்தனை அவசியமாக இருக்கும்போது இன்றைய போதகர்கள் எவ்வளவு தூரம் இவ்வேதப் போதனைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியது அவசியம். நமது ஊழியம் கர்த்தரின் ஆசீர்வாதத்தைப்பெற்று வளர வேண்டுமானால் வேதபோதனைகளை நாம் ஆழமாகக் கற்றுக்கொள்ள முன்வர வேண்டும். நேரத்தை அதற்காகக்கொடுக்க வேண்டும். ஜெபத்தோடு வேதத்தை ஊன்றிப்படிக்க வேண்டும். அப்படிப்புக்குத் துணைபரியும் அனைத்தையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நமது விசுவாசத்தில் நிலைத்திருக்குமாறு, நாம் வேதத்தை முறையாகக் கற்று அதில் நிலைத்திருக்கிறோமா?

## இணையத்தில் "திருமறைத்தீபம்"

திருமறைத்தீபம் இவ்வருட ஆரம்ப முதல் இணையத்தில் **(Internet)** ஒளிவிட ஆரம்பித்துள்ளது. கணனி **(Computer)** வசதியுள்ளவர்கள் **www.biblelamp.org** என்ற இணைய முகவரியில் பத்திரிகையையும் வேறு பல ஆக்கங்களையும் வாசிக்கலாம்.



3

## 1689 விசுவாச அறிக்கை

# பரிசுத்த வேதாகமம்

**ஜோன் ரூத்தர்**

**(விசுவாச அறிக்கையின் முதல் அதிகாரமான பரிசுத்த வேதாகமம் பற்றிய போதனைகளுக்கு போதகர் ஜோன் ரூத்தர் அளித்த விளக்கங்கள் இவ்விதழுடன் நிறைவு பெறுகின்றன.)**

இதுவரை 1689 விசுவாச அறிக்கையின் முதலாம் அதிகாரத்தின் முதல் ஐந்து பாராக்களையும் விளக்கமாகப் பார்த்தோம். இனித்தொடர்ந்து ஏனைய பாராக்களையும் பார்ப்போம்.

பாரா 6 - *தேவனுடைய மகிமைக்கும், மனிதனுடைய இரட்சிப்புக்கும், விசுவாசத்திற்கும், வாழ்க்கைக்கும் அவசியமான தேவனுடைய எல்லாத் திட்டங்களும் பரிசுத்த வேதாகமத்தில் திட்டவட்டமாக (வெளிப் படையாக) அல்லது உள்ளடக்கமாக (இன்றியமையா நிலையில், Necessarily contained) காணப்படுகின்றது. இவற்றோடு எக்காலத்திலும், ஆவியின் மூலமான புதிய வெளிப்பாடுகளோ அல்லது மனிதமரபு வழிமுறைகளோ எதுவுமே சேர்க்கப்படக்கூடாது. (இன்றியமையா நிலையில் என்ற பதம் நேரிடை யான கட்டளைகளாக இல்லாமல் பொதுவான வகையில் கொடுக்கப்பட்டுள்ள தேவபோதனை களைக்குறிப்பதாகும். இத்தகைய போதனைகளை நாம் வேதப்பகுதிகளை ஆராய்ந்து அதில் காணப்படும் தெளிவானதும், எளிதில் நிலை நாட்டக்கூடியதுமான முடிவுகளைக் கொண்டு அறிந்து கொள்ளலாம்.)*

*ஆயினும், தேவனுடைய வார்த்தையிலே வெளிப்படுத்தப்பட்டுள்ள இத்தகைய போதனைகளில் சரியான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ள நமக்கு தேவ ஆவியானவரின் ஆன்மீக அறிவொளி அவசியமானதாகும்.*

*அதேவேளை, கடவுள் வழிபாடு மற்றும் சபை ஆட்சியமைப்பு தொடர்புடைய - பொதுவாக எல்லா மனித நடவடிக்கைகளிலும், அமைப்புக்களிலும் கவனிக்கக்கூடியதுமான - சில சந்தர்ப்பங்களை நாம் இயற்கையின் விதிகள், கிறிஸ்தவ விவேகம், வேதாகமத்தின் பொதுவான விதிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தித் தீர்மானித்து அவற்றை எக்காலத்திலும் கடைப்பிடிக்க வேண்டும். (உதாரணமாக வாரத்தின் முதல் நாளில் வழிபாட்டிற்காக சபைகூடிவர வேண்டும் என்றுதான் வேதம் சொல்கிறதே தவிர, எந்தெந்த நேரங்களில்கூடிவர வேண்டுமென்று கூறவில்லை. நாம் இயற்கையின் விதிகளைப் பயன்படுத்தி எல்லோருக்கும் வசதியான நேரத்தில் கூடிவர வேண்டும்.)*

**விளக்கவுரை:**

**உ. வேதத்தின் போதுமான தன்மையும், பரிசுத்த ஆவி அளிக்கும் ஆன்மீக அறிவொளியும் - பாரா 6.**

1. வேதம் தேவனின் அனைத்து ஆலோசனை களையும் தன்னில் கொண்டுள்ளது.

2. மனிதனுடைய இரட்சிப்புக்கும், விசுவாசத் திற்கும், வாழ்க்கைக்கும் அவசியமான அனைத்துக் காரியங்களையும்பற்றி வேதம் போதிக்கின்றது.

   (அ). கட்டளையாகத்தரப்பட்டுள்ள போதனைகள் (பத்துக்கட்டளைகளைப் போன்றவை)

   (ஆ). இன்றியமையா நிலையில், உள்ளடக்க மாக காணப்படும் போதனைகள் (பொது வான விதிகள், பாடங்கள், வலியுறுத்தும் போதனைகள்)

3. வேறு எதுவும் சேர்க்கப்படக்கூடாது

   (அ). ஆவியின் பெயரில் புதிய வெளிப் பாடுகள்.

   (ஆ). மனித பாரம்பரியங்களும், சடங்குகளும்.

4. மனித நடவடிக்கைகளிலும், சமுதாயத்தின் அமைப்புகளிலும் பொதுவாகக் கவனிக்கக் கூடியவை. இவை கீழ்வருவனவற்றால் தீர்மானிக்கப்பட வேண்டும்.

   (அ). இயற்கையின் விதிகள்
   (ஆ). கிறிஸ்தவ விவேகம்
   (இ). வேதம் போதிக்கும் பொதுவான விதிகள்

மேலே தரப்பட்டுள்ள ஆறாவது பாராவிற்கான சுருக்க மான படிமுறை விளக்கத்தில் தொடர்ச்சியான ஒரு சிந்தனைப்போக்கைப் பார்க்கலாம். தேவன் நமக்கு பூரணமான வேதத்தைத் தந்துள்ளார். இதவே தேவனின் முழுமையான ஆலோசனையாக உள்ளது. வேதம் நமக்கு

இரட்சிப்பை அளித்து, கிறிஸ்தவ வாழ்க்கையின் விசுவாச வளர்ச்சிக்குத் தேவையான அனைத்தையும் அளிக்கக்கூடியதாக இருக்கிறது. ஆகவே, அதோடு வேறு எதையுமே சேர்க்கக்கூடாது. ஆனால், வேதம் கட்டளையிட்டுப் போதிக்காத அநேகமான காரியங்களில் நாம் நமது ஞானத்தைப் பயன்படுத்தி, வேதத்தின் பொதுவான போதனைகளைப் பயன்படுத்திப் புரிந்து கொள்வதோடு அப்போதனைகளை நம் வாழ்வில் கடைப்பிடிக்கவும் வேண்டும். இதனையே பாரா 6 விளக்குகின்றது.

இவ்வதிகாரத்தின் முதல் பாரா, நாம் தேவனை மகிமைப்படுத்தவும், இரட்சிப்பை அடைந்து, கிறிஸ்தவ வாழ்க்கையை வாழவும் தேவையான அனைத்தையும் வேதம் கொண்டுள்ளதாகப் போதிக்கிறது. இப்போதனை களனைத்தும் வேதத்தில் நேரடியான கட்டளைகள் மூலமாகவோ அல்லது வேதத்தை வேதத்தோடு ஒப்பிடுவதன் மூலம் நாம் பெற்றுக்கொள்ள வேண்டிய பொதுவான போதனைகள், விதிகள் மூலமாகவோ தரப்படுகின்றன. விசுவாச அறிக்கை திட்டவட்டமாக தரப்பட்டுள்ள போதனைகள் என்று குறிப்பிடுவது பத்துக்கட்டளைகள், மற்றும் பழைய ஏற்பாட்டிலுள்ள அனைத்துக் கட்டளைகளையும், புதிய ஏற்பாட்டில் காணப்படும் அனைத்து நேரடிக்கட்டளைகளை யும் போதனைகளையுமாகும். இத்திட்டவட்டமான நேரடியான போதனைகளைத்தவிர உள்ளடக்க மாகவும் தேவனுடைய போதனை கள் வேதத்தில் காணப்படுவதாக விசுவாச அறிக்கை தெரிவிக் கிறது. இவையும் நமக்கு இன்றி யமையாதவையாக உள்ளன. இப்போதனைகள் கட்டளைகளாக க்கொடுக்கப்படாமல், நாம் வேதப் பகுதிகளை ஏனைய வேதப்பகுதிகளோடு ஒப்பிட்டுப்படித்து அறிந்து கொள்ள வேண்டிய பொதுவான போதனைகள் மற்றும் விதிகளாகவும், வேதத்தில் காணப்படும் பாத்திரங்களின் வாழ்க்கையின் மூலம் பெற்றுக்கொள்ள வேண்டிய போதனைகளாகவும், உவமைகள், உருவகங்கள், அடையாளங்கள் ஆகியவற்றி லிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய போதனைகளாக வும் காணப்படுகின்றன. இவையே தேவனின் முழு வெளிப்பாடாகும், முழு ஆலோசனையுமாகும்.

**பாவிகளுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் தேவையான அனைத்தையும் வேதம் தன்னில் கொண்டிருப்பதால் அவ்வெளிப்பாட்டோடு எவரும் வேறு எதையும் சேர்க்கக்கூடாது.**

“தேவனுடைய ஆலோசனை” (The whole counsel of God) என்ற பதம் அப்போஸ்தலர் 20:27 இல் காணப்படு கின்றது. மிகவும் ஆழமான சத்தியத்தை வெளிப்படுத் தும் இப்பதங்கள், தேவன் பேசி இறுதியில் எழுத்தில் வடித்துத்தந்துள்ள அவரது முழு வெளிப்பாட்டையும் குறிக்கின்றது. பேதுரு, 2 பேதுரு 1:3 இல், இவ்வுலகில் பக்திவிருத்தியோடு வாழத்தேவையான அனைத்தையும் கிறிஸ்துவுக்குள்ளான அறிவில் தரப்பட்டுள்ளாதாகத் தெரிவிக்கிறார். இவ்வறிவை வேதத்திலிருந்தே பெற்றுக் கொள்கிறோம்.

வேதம் இவ்வுலகிலும், சபையிலும் நமது வாழ்க்கையிலும் தனது நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும் பூரணத் துவத்தைக் கொண்டிருக்கிறது என்பதையே வேதம் போதுமானது என்று கூறுவதன் மூலம் நாம் குறிப்பிடு கிறோம். கட்டிடங்களை எழுப்புவதற்கோ, விஞ்ஞான ஆராய்ச்சிக்குப் பயன்படுத்திக்கொள்ளவோ அல்லது வியாபார அறிவை அதிகரித்துக்கொள்ளவோ வேதம் கொடுக்கப்படவில்லை. இவ்வொவ்வொன்றிற்கும் வேதத்திற்கும் நிச்சயமாகத் தொடர்பிருக்கின்றது என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால், விஞ்ஞானம், வரலாறு, பொருளாதாரம் ஆகியவற்றில் அறிவைப் பெற்றுக் கொள்வதற்கான கைநூலாக வேதத்தைக் கர்த்தர் நமக்கு அளிக்கவில்லை. இக்காரியங்களைப் பற்றிக் குறிப்பிடும்போதெல்லாம் வேதம் நிச்சயமாக உண்மையையே வெளிப்படுத்துகின்றது. அத்தோடு, இவையனைத்திற்கும் வேதத்திற்கும் பெருந்தொடர்பிருக் கின்றது. எந்தவொரு காரியத்திற்குமான அடித்தளத்தை ஏற்படுத்தித் தரும் வேதம் அக்காரியத்தைப்பற்றிய படிப்புப் போக வேண்டிய பாதையையும் நிர்ணயிக்கின்றது.

ஆனால், வேதம் பாவிகளை கிறிஸ்துவிடத்தில் வழி நடத்துவதற்குப் போதுமானதாகவும், அதற்கு அவசிய மான அனைத்தையும் தனக்குள் கொண்டதாகவும் உள்ளது. கிறிஸ் தவர்கள் விசுவாசத்துடன் வாழ்வ தற்குத் துணை செய்யக்கூடிய அனைத்தையும் பூரணமாகத் தன்னில் கொண்டுள்ளது. இப் போதனை நமக்கு உற்சாகமளிக்கு மொன்றாகவும், அதேநேரம் நமக்கு எச்சரிக்கையாகவும் அமைந்துள் ளது. பாவிகளுக்கும், கிறிஸ்தவர் களுக்கும் தேவையான அனைத் தையும் வேதம் தன்னில் கொண் டிருப்பதால் அவ்வெளிப்பாட்டோடு எவரும் வேறு எதையும் சேர்க்கக் கூடாது. விசுவாச அறிக்கை வரலாற்றில் இருவழிகளில் வேதத்துடன் புறமனித வெளிப்பாடுகளை சேர்க்கும் முயற்சிகள் இருந்துள்ளமையை சுட்டிக்காட்டுகின்றது.

(1). இதில் முதலாவது, **ஆவியின் வெளிப்படுத்தல்களா கும்.** கிறிஸ்தவ திருச்சபையின் ஆரம்ப காலத்திலேயே இம்முயற்சிகள் நடந்துள்ளன. 1 கொரிந்தியர் 12-14 வரை யும் காணப்படும் போதனைகளில் பவுல் அப்போஸ்தலன் இம்முயற்சிகளையே கண்டித்துத் திருத்துகிறார். கிறிஸ் தவ சபை வரலாற்றின் ஆரம்ப காலத்தில் மொன்டனஸ் (Montanus) என்ற மனிதர் இதனை ஆரம்பித்து வைத்த தோடு அவரால் உருவாக்கப்பட்ட இயக்கமும் மொன்டனி சம் (Montanism) என்ற பெயரைப்பெற்றது. திருச்சபை யில் அக்காலத்தில் காணப்பட்ட ஆவிக்குரிய வாழ்வில் உயிரற்ற தன்மையை அகற்ற வேண்டும் என்ற நோக்கத் தில் இவ்வியக்கம் உருவானது. இதன் காரணமாகவே தேவ மனிதர்கள் என்று தம்மை அழைத்துக்கொள்ளு பவர்கள் ஆவியின் பெயரால் புதிய வெளிப்பாடுகளை அளிப்பதும், அற்புத வரங்களைப் பயன்படுத்தும் நிலைமை யும் தோன்றியது. இவ்வியக்கம் முறையாக வேதத்தைப் படிக்கும் முறையை நிராகரித்து வேத அறிவைவிட அனுபவமே மேலானது என்று வலியுறுத்தியது. சபை வரலாற்றில் டேர்டுலியன் (Tertullian) இதனையே பின்பற்றியதை வாசிக்கலாம். பெந்தகொஸ்தே, கெரிஸ்

மெட்டிக் இயக்கங்களுக்கும், வாட்ச்மன் நீ, அன்ட்ரு மரே, எப். பீ. மேயர் போன்றோரின் போதனைகளுக்கும் இவ்வியக்கமே முன்னோடியாக இருந்துள்ளது.

இன்று அநேக சுவிஷேச இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், ஆவியானவர் வேதத்தைத்தவிர தொடர்ந்தும் வேறு வெளிப்படுத்தல்களை அளித்துக்கொண்டிருப்பதாக வலியுறுத்திக்கொண்டிருக்கிறார்கள். இதனைத் தீர்க்க தரிசனத்தின் மூலம் ஆவியானவர் செய்து வருவதாக அவர்கள் வாதிடுகிறார்கள் (1 கொரி.12, 14). எவராவது சபைக்கூட்டம் நடக்கும்போது எழுந்து நின்று ஆவியின் பெயரில் கர்த்தரின் செய்தியை அளிக்கலாம் என்று கூறி வருகிறார்கள். இத்தகைய செய்தி ஒரு தனிப்பட்ட நபருக்காகவோ அல்லது சபைக்காகவோ இருக்கலாம். இச்செய்தி அவர்களுடைய வாழ்க்கையில் கர்த்தரின் சித்தம் என்ற என்று வெளிப்படுத்துவதாக இருக்கிறது என்று இவர்கள் நம்புகிறார்கள்.

*(ஆங்கிலத்தில் வாசிக்கக் கூடியவர்கள்* O. Palmar Robertson *எழுதிய* The Final Word (Banner of Truth Trust) *என்ற நூலைப்பெற்று வாசிப்பது நல்லது. 1993 இல் வெளிவந்த இந்நூல் இவற்றை வேதபூர்வமாக ஆராய்கிறது.)*

மேலே நாம் குறிப்பிட்ட போக்கு வேதத்தின் அதிகாரத்தையும், அதன் போதுமான தன்மையையும் நிராகரிப்பதாக உள்ளது. நாம் எந்தவிதமான தொழிலைச் செய்ய வேண்டும்? அல்லது எங்கே வாழ வேண்டும் எனறு சொல்வதற்கு ஒரு தீர்க்கதரிசி தேவையா? யாரிடமாவது ஒரு முக்கியமான விடயத்தைப் பேசுவதற்கு நமக்கு ஆவியின் வெளிப்படுத்தல் தேவையா? வேதம் பூரணமானது என்றும் கர்த்தரின் வெளிப்படுத்தல் அதில் மட்டுமே காணப்படுகின்றது என்றும் நம்புகிறவர்களுக்கு **இவை அவசியமில்லை.** ஆனால், நமது வாழ்க்கைக்கும், விசுவாசத்திற்கும் போதுமானதாக வேதம் எவ்வாறு செயல்படுகின்றது என்ற வினாவிற்கு நாம் பதிலளிக்கத் தான் வேண்டும். கிறிஸ்தவர்களாகிய நாம் ஆவிக்குரிய வாழ்க்கையை வாழ்ந்து, வேதத்தை வேதத்தோடு ஒப்பிட்டு ஆராய்ந்து படிக்கும்போது, கர்த்தர் நாம் கற்றுக் கொள்ளும் வேதபோதனைகளின் மூலம் நம்மை வழி நடத்தி வாழ்க்கையில் எல்லாத் தீர்மானங்களையும் எடுக்கும்படிச்செய்கிறார் என்பதே இக்கேள்விக்கான சரியான பதிலாகும்.

ஆவியானவர் வேத போதனைகளில் நம்மை வழிநடத்து வதைத்தவிர வேறு புதிதாக ஒன்றையும் வெளிப்படுத்துவ தில்லை. அவர், ஏற்கனவே கர்த்தர் தந்துள்ள வேத வசனங்களில் நமக்கு விளக்கத்தைக் கொடுக்கிறார். அவற்றைப்புரிந்து கொள்ள உதவுகிறார். இப்போதனை யையே விசுவாச அறிக்கையின் இப்பகுதி விளக்குகிறது. இதற்கு ஆதாரமாக இது 1 கொரி. 2:9-12 ஆகிய வேத பகுதியைச் சுட்டிக்காட்டுகிறது.

வேதம் போதிக்கின்ற காரியங்களில் இரட்சிப்புக்குரிய விளக்கங்களைப்பெற்றுக்கொள்ள பரிசுத்த ஆவியானவர் அளிக்கும் அறிவொளி (விளக்கம்) மிகவும் அவசிய மானது. வேதத்திற்கும், ஆவியானவருக்கும் இடையில் உள்ள மிக முக்கியமான இத்தொடர்பை நமது முன்னோர்களான சீர்திருத்தவாதிகள் மிகவும் வலியுறுத் திப் போதித்துள்ளனர். பரிசுத்த ஆவியானவர் வேதத்தில் நமக்குத் தெளிவை அளிக்கிறார். அவர் வேதத்தின் மூலமே நம்மோடு பேசுகிறார். வேதம் பேசுகிறபோது அவரே பேசுகிறார். வேதத்திற்கு வெளியில் இருந்து அவர் ஒரு போதும் பேசுவதில்லை. பரிசுத்த ஆவியான வரின் துணையோடு மட்டுமே வேதத்தை எவரும் புரிந்து கொண்டு அதற்கு அடிபணிய முடியும். நமது விசுவாசக் கண்களுக்கு வேதத்தில் அறிவொளியை ஏற்படுத்தி, அதன் அற்புதமான போதனைகளை நாம் புரிந்து கொள்ளும்படிச்செய்து பரிசுத்த ஆவியானவர் நமக்கு இவ்விதமாகத் துணைபுரிகிறார்.

**கிறிஸ்தவர்களாகிய நாம் ஆவிக்குரிய வாழ்க்கையை வாழ்ந்து, வேதத்தை வேதத்தோடு ஒப்பிட்டு ஆராய்ந்து படிக்கும்போது, கர்த்தர் நாம் கற்றுக்கொள்ளும் வேதபோதனைகளின் மூலம் நம்மை வழிநடத்தி வாழ்க்கையில் எல்லாத் தீர்மானங்களையும் எடுக்கும்படிச்செய்கிறார்.**

யோவானுடைய சுவிஷேசத்தில் நமது ஆண்டவர் ஆவியான வரைப்பற்றி இருவிதமான சந்தர்ப்பங்களில் போதித்த போதனைகளை நினைத்துப் பாருங்கள். யோவான் 7:38, 39 ஆகிய வசனங்களில், "விசுவா சிக்கிறவனுடைய உள்ளத்தில் ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" என்று (38) கூறி, "விசுவாசிக்கிறவர்கள் அடையப் போகிற ஆவியைக் குறித்தே இப்படிச் சொன்னார்" (39) என்று இவ்வசனங்களில் யோவான் நினவூட்டுவதை வாசிக்கிறோம். ஆவியானவர் இவ்வாறே விசுவாசிகளில் செயல்படுகிறார். கிறிஸ்துவைப்பற்றிய நம்பிக்கையை அளித்து நாம் அவரை விசுவாசித்து வளரும்படிச் செய்வதே ஆவியானவரின் செயல் என்பதை இது விளக்குகிறது. இத்தகைய அனுபவத்தை நாம் கிறிஸ்துவை அருந்துவதால் மட்டுமே அடைய முடியும். அதாவது கிறிஸ்துவை அறிந்து கொண்டு அவரோடு ஐக்கியத்தில் வருவதையே இவ்வாறு கூறுகிறோம்.

அத்தோடு, பரிசுத்த ஆவியானவர் தாம் போதித்த போதனைகளை நமது நினைவுக்குக் கொண்டுவந்து அவற்றை நாம் பின்பற்றும்படிச் செய்வார் என்றும் கிறிஸ்து போதித்துள்ளார். இதை யோவான் 16:14 இல் வாசிக்கிறோம். அதாவது, ஆவியானவர் நாம் கிறிஸ்துவை நினைவுகூறும்படியும், அவரது போதனை களில் ஆர்வம்கொண்டு அவற்றைக் கடைப்பிடிக்கும் படியும் செய்வார். கிறிஸ்துவைப்பற்றியல்லாத வேறு வேலைகளை பரிசுத்த ஆவியானவர் செய்வதில்லை. இன்றைய கெரிஸ்மெட்டிக் இயக்கம் இங்கேயே பெருந் தவறிழைக்கிறது. அந்நிய பாஷையில் பேச முயற்சிப்ப தன் மூலமும், அற்புதங்கள் செய்ய முயற்சிப்பதன் மூலமும், வேறும் கோமாளித்தனமான காரியங்களைச்

செய்வதன் மூலமும் அவர்கள் ஆவியானவரின் செயற் பாட்டை வலியுறுத்த முனைந்து கிறிஸ்துவுக்கும் வேதத்திற்கும் முரணாக நடக்கிறார்கள். இத்தகைய காரியங்களைச்செய்வதில் காலத்தைச் செலவிடும்படி கிறிஸ்து எங்குமே போதிக்கவில்லை. இவற்றின் மூலம் கிறிஸ்தவ வாழ்க்கையில் ஒருவரும் வளரவும் முடியாது.

யோவான் 14-16 வரையுள்ள அதிகாரங்களை வாசித்துப் பார்த்தீர்களானால் பரிசுத்த ஆவியைப்பற்றிய புதிய ஏற்பாட்டின் அனைத்து முக்கியமானமான போதனை களையும் அங்கே பார்க்கலாம். புதிய ஏற்பாட்டின் ஏனைய பகுதிகளில் தரப்பட்டுள்ள ஆவியானவரைப் பற்றிய போதனைகளுக்கெல்லாம் இப்பகுதியே அடித்தள மாக உள்ளது. அதாவது இப்பகுதியில் கொடுக்கப்பட் டுள்ள போதனைகளுக்கு முரணாக மற்றப்பகுதி களுக்கு நாம் விளக்கமளிக்கக் கூடாது. இப்பகுதிகளில் அந்நிய பாஷைபற்றியோ, அற்புதங் கள் பற்றியோ கிறிஸ்து எதுவுமே கூறவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். இங்கே, சத்தியத்தை வெளிப்படுத்தும் ஆவியானவரின் முக்கியமான செயலைப்பற்றியே கிறிஸ்து போதிக்கிறார். இவ்வித மாகவே ஆவியானவர் நமக்கு வேதத்தில் தெளிவை அளிக்கிறார்.

அத்தோடு ஆவியானவரின் வேதத்தில் நமக்குத்தரும் ஆன்மீக அறிவொளியை, அதாவது விளக்கத்தை நாம் ஒரு இரகசிய மான செயலாகவோ அல்லது மனத்திற்கெட்டாத, அறிவுபூர்வமற்ற ஒரு அனுபவமாகவோ எண்ணி விடக்கூடாது. ஆவியானவர் அளிக்கும் அறிவொளி அறிவு பூர்வமானதும், வேதபூர்வமானது மாகும் (1 கொரி. 2:13).

இதுவரை வேதத்தோடு புறமனித வெளிப்பாடுகளை சேர்க்கமுனையும் இருவழிகளில் முதலாவதான ஆவியின் பெயரில் வேதத்திற்கு புறம்பான வெளிப்படுத் தல்களை தோற்றுவிக்கும் செயல்களைப் பார்த்தோம்.

(2). இரண்டாவதாக, **வேதத்தோடு மனித பாரம்பரியங் களை சேர்க்க முனையும்** செயலைப்பார்ப்போம். ரோமன் கத்தோலிக்க மதம் தனது கவுன்ஸில்களின் போதனை களையும், பாப்பையரின் சிந்தனைகளையும், தீர்மானங் களையும் வேதத்துடன் சேர்த்துக்கொண்டுள்ளது.

விசுவாச அறிக்கையை நமக்களித்துள்ள சீர்திருத்த வாதம் மேல்குறிப்பிட்ட இவ்விரு சிந்தனைப்போக்கிற்கும் எதிராகப்போராடியது. நாமும் அதேபோல் இவற்றிற்கெதி ராகப் போராட வேண்டும். நாம் ஆவியானவரால் வழி நடத்தப்பட வேண்டும் (ரோமர் 8:14); ஆவியானவரால் நிரப்பப்பட வேண்டும் (எபேசி. 5:19); ஆவியில் நடக்க வேண்டும் (கலா. 5:16, 25); ஆவியைத் துக்கப்படுத்தக் கூடாது (எபேசி. 4:30); ஆவியை அவித்தலாகாது (1 தெசலோ. 5:19). ஆனால், ஆவிக்குரிய இவ்வெல்லாக் காரியங்களையும், விசுவாச அறிக்கை கூறுவதுபோல், ஆவியானவர் "வார்த்தையில் இருந்தும், வார்த்தையின் மூலமுமே" எமது இருதயங்களில் செய்கிறார் (பாரா 5). வேதத்துடன் எதையும் சேர்க்கும் முயற்சிகளை நாம் முறியடிக்க வேண்டும். வேதத்தைத் தவறான முறையில் விளங்கிக்கொள்வதன் மூலமும், தவறாகப்புரிந்து கொண்டவைகளை வாழ்க்கையில் கடைப்பிடிப்பதன் மூலமுமே பலர் வேதத்தோடு வேறு காரியங்களை இணைக்கிறார்கள். ஏனெனில், அவர்கள் வேதத்தை சரிவரப்புரிந்து கொண்டு அதன் போதனைகளின்படி வாழாதபோது அவர்களுடைய வாழ்க்கை வேதவாழ்க்கை யாக அமையாமல் உலகப்பிரகாரமானதாக அமைகின்றது. இது கிறிஸ்தவர்கள் வேதத்துடன் உலக ஞானத்தை இணைப்பதாகும். அதுமட்டுமல்லாமல், வேதம் போதித்த வற்றிற்கும் மேலான காரியங்களை பிறர் வாழ்க்கையில் நாம் எதிர்பார்க்கும்போது அச் செயலும் வேதத்துடன் வேறு காரியங்களை இணைப்ப தாகும். பரிசேயர்கள் இதையே செய்து வந்தனர் என்பதை இயேசு வெளிப்படுத்தியுள்ளார் (மத்தேயு 15:1-14; 23:1-36).

இறுதியாக, விசுவாச அறிக்கையின் இப்பகுதி மனித நடவடிக்கைகளி லும், சமுதாயத்திலும் காணக்கூடிய ஒரு பொதுவான தன்மையைக் கிறிஸ்தவ சபையிலும்காண முடி யும், காண வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. முக்கிய மாக இதனை சபை ஆராதனை சம்பதந்தமான விடயங்களில் பார்க்கலாம். இதற்கு ஆதாரமாக விசுவாச அறிக்கை 1 கொரி. 11:13, 14; 1 கொரி. 14:26, 40 ஆகிய பகுதிகளைச் சுட்டிக்காட்டுகின்றது. முக்கியமாக இவற்றில் 1 கொரி 14 ஆவது அதிகாரத்தைப் பார்ப்போம்.

> பரிசுத்த ஆவியானவர் வேதத்தில் நமக்குத் தெளிவை அளிக்கிறார். அவர் வேதத்தின் மூலமே நம்மோடு பேசுகிறார். வேதம் பேசுகிறபோது அவரே பேசுகிறார். வேதத்திற்கு வெளியில் இருந்து அவர் ஒரு போதும் பேசுவதில்லை. பரிசுத்த ஆவியான வரின் துணையோடு மட்டுமே வேதத்தை எவரும் புரிந்து கொண்டு அதற்கு அடிபணிய முடியும்.

திருச்சபையில் "சகலமும் (எல்லாக்காரியமும்) நல் லொழுக்கமாகவும் கிரமமாயும் (ஒழுங்குமுறையோடு) செய்யப்படவேண்டும்" என்று கூறும் பவுல் அதற்கான காரணத்தை 33 ஆம் வசனத்தில் தருகிறார், "தேவன் கலகத்திற்குத் தேவனாயிராமல், சமாதானத்திற்குத் தேவனாயிருக்கிறார்." புதிய ஏற்பாட்டுச்சபை அமைப்புக் குத் தேவையான அடிப்படையான போதனைகளை வேதம் தந்தபோதும், அதன் அநேக காரியங்களை இயற்கையின் விதிகளையும், கிறிஸ்தவ ஞானத்தையும், வேதத்தின் பொதுவான விதிகளையும் பயன்படுத்தித் தீர்மானித்துக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கின் றது.

இவை இரண்டிற்குமிடையில் உள்ள வேறுபாட்டை நாம் எவ்வாறு அறிந்து கொள்வது? முதலாவதாக, புதிய ஏற்பாட்டில் ஆராதனைபற்றி தெளிவான போதனைகள் காணப்படும் முக்கியமான வேதப்பகுதிகளை நாம் ஆராய வேண்டும். அப்போஸ்தலர் நடபடிகள் 2:42, ஆராதனை யின் முக்கிய அம்சங்களான போதனை, திருவிருந்து, ஐக்கியம், சபை ஆராதனை ஆகியவற்றைச் சுட்டிக்

காட்டுகின்றது. மேய்த்தலுக்கான நிருபங்கள் என்று அழைக்கப்படும் புதிய ஏற்பாட்டின் தீமோத்தேயு, தீத்து ஆகிய நிருபங்கள் சத்தான போதனைகளின் அவசியத் தைச் சுட்டிக்காட்டுவதோடு, எபேசியர் 5:19; கொலோ செயர் 3:16 ஆகிய பகுதிகள் நற்செய்தி ஊழியம், சங்கீ தம், கீர்த்தனைகள் பாடுதல் என்பவற்றின் அவசியத்தை யும் சுட்டிக்காட்டுகின்றன. இவையே சபை மக்கள் ஆராதனையில் பின்பற்ற வேண்டியவை. இன்று இவற்றை நாம் வலியுறுத்திப் போதிக்க வேண்டியது அவசியம். சபைத்தலைவர்களின் வழிநடத்தலுக்குட்பட்டு சபையார் இவற்றையே சபைகளில் கடைப்பிடிக்க வேண்டும்.

ஆனால், இவற்றைப்பின்பற்றுவதற்கு அவசியமான பல காரியங்களை சபையார் சபைத்தலைவர்களின் வழிநடத்த லின்படித் தீர்மானித்துப் பின்பற்றுதல் அவசியம். அத்தகைய காரியங்கள் யாவை? எத்தனை தடவைகள் ஆராதனைக்குக்கூடிவருதல் வேண்டும்? அக்கூட்டங்கள் எவ்வளவு நேரம் நடக்க வேண்டும்? சபை ஐக்கியத்திற்கு அவசியமான கூட்டங்களை ஏற்பாடு செய்தல், சுவிஷேச ஊழியத்திற்கான கூட்டங்கள், மற்றும் சபை அங்கத்தவர் களுக்கான கூட்டங்கள், இதுபோன்ற வேறும் பல காரியங்களுக்கான தீர்மானங்களை எடுக்கும்போது அவைபற்றி வேதம் நேரடியான போதனைகளை அளிக் காமல் பொதுவான போதனைகளையே அளிப்பதால் நாம் கிறிஸ்தவ விவேகத்தையும், இயற்கையின் விதிகளையும் பயன்படுத்தி வேதபூர்வமான தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

விசுவாச அறிக்கை இதனைப்பற்றிப் போதிக்கும்போது, ஆராதனையுடன் நாம் வேதம் குறிப்பிட்டுப்போதிக்கும் அம்சங்களுடன் வேறு எதனையும் சேர்க்கும்படிப் போதிக்கவில்லை. ஆராதனையில் வேதம் குறிப்பிட்டுப் போதிக்காத எதையும் சேர்க்கும் முயற்சியில் சபைகள் ஈடுபடக்கூடாது. ஆராதனை கவர்ச்சியாக இருக்க வேண்டும் என்று கர்த்தருக்குப்பிடித்தமில்லாததை செய்ய முற்படக்கூடாது.

பாரா 6 ற்கு ஆதாரமாக விசுவாச அறிக்கை 2 தீமோ. 3:15-17; 1 கொரி. 2:9-12 ஆகிய பகுதிகளைச் சுட்டிக் காட்டுகின்றது. இவற்றோடு, கலா. 1:8,9; யோவான் 4:45; 1 கொரி. 11:13,14; 14:26,40 ஆகிய பகுதிகளையும் சேர்த்துக்கொள்ளலாம்.

**பாடம்:** புதுமையானவற்றையும், நவீனமானவற்றையும் நாடி ஓடும் கலாச்சாரத்தைப்பின்பற்றும் மக்கள் வாழும் ஒரு காலப்பகுதியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இத்தகைய போக்கு நம்மை நிச்சயமாகப்பாதிக்கின்றது என்ற நிதர்சனமான உண்மையை நம்மால் மறுக்க முடி யாது. ஆனார், மாறாத்தன்மை கொண்ட நம் தேவனும், முற்றுப்பெற்ற அவரது வெளிப்படுத்தலும் இப்போக்கிற்கு இடம் தருவதில்லை. உண்மையில் கூறப்போனால் பழையதையே புதிதானதாகவும், புதுமையானதாகவும் காட்டுகிறவராக நம்தேவன் இருக்கிறார். லூக்கா 2:24:32 இல், எம்மாவு செல்லும் வழியில் கிறிஸ்து தனது இரு சீடர்களிடத்திலும் வேதத்தை விளக்கிப்பேசியபோது அவர்களுடைய இருதயம் பற்றி எரியத்தொடங்கியதாக வாசிக்கிறோம். இது எதைப்போதிக்கின்றதென்றால், வேதம் தானே தன்னை எமக்கு வெளிப்படுத்தும் வல்லமையைக் கொண்டு போதுமானதாக அமைந்திருக் கிறது என்பது தான். ஒளி நமக்குப்பாதையைக் காட்டு வதுபோல் முற்றுப்பெற்ற, பூரணமான வேதம் பரிசுத்த ஆவியின் கிரியையின் மூலமாக நமக்கு வழிகாட்டியாக அமைகின்றது. அது நமக்கு தேவ சித்தத்தை வெளிப் படுத்தி, கர்த்தருடைய பிரசன்னத்தையும் உணரச்செய் கிறது. ஆகவே, வேதம் நமது மனத்திற்கு மட்டும் உணவளிக்காமல் நமது உணர்வுகளையும் தூண்டு கிறது.

இக்காலத்தில் பலர் ஆராதனையைக் கவர்ச்சியுள்ள தாக்குவதற்கு நாடிஓடுகின்ற வேதத்திற்குப் புறம்பான அம்சங்கள் நமக்குத்தேவையில்லை.


## ஐரோப்பா, வட அமெரிக்கா, கனடா, மலேஷியா சிங்கப்பூர் மற்றும் மத்தியகிழக்கு நாடுகளில் வாழும் வாசகர்களுக்கு ஒரு வேண்டுகோள்

1999 ஆம் ஆண்டு முதல் பத்திரிகைக்கு சந்தா அறிமுகப்படுத்தப்படுகிறது. தொடர்ந்தும் பத்திரிகையைப் பெற்றுக் கொள்ள விரும்புகிறவர்கள் கீழே தரப்படும் சந்தா விபரப்படி இவ் வருடத்திற்கான (1999) சந்தாவைத் தயவுடன் அனுப்பி வைக்கவும்.

ஒரு வருட சந்தா — NZ $16.00 (தபால் செலவு உள்ளடங்கியது)
(வங்கிக் காசோலைகளை நியூசிலாந்து டாலரில் அனுப்பவும்)

அனுப்ப வேண்டிய முகவரி: Bible Lamp, P O Box 62 159, Sylvia Park Auckland, New Zealand.

உ. வேதத்தின் தெளிவான தன்மை – பாரா 7

1. எல்லா வேதப்பகுதிகளும் இலகுவாக விளங்கிக்கொள்ளக் கூடியவை அல்ல.

2. இரட்சிப்புக்கு இன்றியமையாதவைகளை வேதம் தெளிவாக விளக்குகின்றது.

வேதம் தன்னில் இலகுவாகப் புரிந்து கொள்ளக்கூடிய பகுதிகளையும், புரிந்துகொள்ளக் கடினமான சில பகுதி களையும் கொண்டுள்ளது என்பது கிறிஸ்தவர்கள் அறிந்த உண்மை. ஆனால், கர்த்தரை அறியாதவர்கள், வேதம் புரிந்த கொள்ள முடியாததொன்றாக இருப்பதா லேயே அதற்கு விளக்கம் கொடுப்பவர்களால் அதனை சரியாக விளக்க முடியவில்லை என்று கூறுவார்கள். இவர்களுடைய கூற்று, வேதத்தில்தான் தவறிருப்பது போல் பொருள் தருகிறது.

ஆனால், நமது விசுவாச அறிக்கை, வேதம் தெளிவுள் ளது என்ற அடிப்படை உண்மையைப் போதிக்கின்றது. வேதத்தின் சில பகுதிகள் மட்டும் தெளிவானவை, ஏனைய பகுதிகள் தெளிவற்றவை என்று இது கூற வில்லை. ஆனால், வேதம் முற்றும் தெளிவானதாக இருப்பதோடு, இரட்சிப்புக்கு இன்றியமையாத போதனை களை அளிக்கும் பகுதிகளில் எவரும் புரிந்து கொள்ளக் கூடிய தெளிவைக்கொண்டுள்ளது என்றும் போதிக்கின் றது. இக்காரியங்களில் படித்தவர்களும், படிக்காதவர் களும் சாதாரணமான முறைகளைப் பயன்படுத்தி வேதத்தைப்படித்து போதுமான அறிவைப்பெற்றுக் கொள்ள முடியும் என்று போதிக்கின்றது.

பாரா 6 ஐப்படிக்கும்போது, வேதத்தின் இரட்சிப்புக்குரிய போதனைகளைப் புரிந்துகொள்ள நமக்கு பரிசுத்த ஆவியின் துணை அவசியம் என்று படித்தோம். ஆனால், விசுவாச அறிக்கையின் இப்பாரா, அவ்வேதப் படிப்பில் நமது கடமை என்ன என்பதை விளக்குகிறது. அதாவது, கர்த்தரை நாடுதல், வேதத்தை ஊக்கத்தோடு படித்தல், தேவ ஞானத்திற்காக ஜெபித்தல், சரியான முறையில் வேதத்தை விளங்கிக்கொள்ளப்பயன்படுத்த வேண்டிய விதிகளைப்பயன்படுத்திப்படித்தல் ஆகியனவே நமது கடமைகளாகும். இவற்றை நாம் முறையாக செய்யும்போது வேதத்தை நாம் தெளிவாகப்புரிந்து கொள்ள முடியும். வேதம் தெளிவானது என்று கூறும் போது இதையே நாம் குறிப்பிடுகிறோம். வேதத்தைப் படித்துப்புரிந்து கொள்வதற்கு ஒருவரும் ஞானிகளாக இருக்க வேண்டிய அவசியமில்லை. வேத அறிவுள்ள ஞானவான்களுக்காக நாம் தேவனுக்கு நன்றி கூற வேண்டும். ஆனால், வேதம் அவர்களுக்காக மட்டும் கொடுக்கப்படவில்லை, அது நமக்காகவும் கொடுக்கப் பட்டுள்ளது. சங்கீதக்காரன் 19:7-9; 119:130 கூறுவதைக் கவனிக்க வேண்டும்.

அதேநேரம், வேதத்தில் நம்மால் புரிந்து கொள்ளக் கடினமான பகுதிகளும் காணப்படுகின்றன என்பதை நாம் மறுக்க முடியாது. இவை நம்மால் புரிந்து கொள்ளக் கடினமான பகுதிகளாக இருந்தபோதும், புரிந்து கொள்ள முடியாத பகுதிகளல்ல. இதைக் குறிப் பிட்டுக்காட்டும் சில வேதப்பகுதிகளைப் பார்ப்போம். பேதுரு 2 பேதுரு 3:16 இல், பவுலுடைய நிருபங்களைப் பற்றிப் பேசும்போது, “அவன் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது, கல்லா தவர்களும், உறுதியில்லாதவர்களும் மற்ற வேத வாக் கியங்களைப் புரட்டுகிறதுபோலத் தங்களுக்குக் கேடு வரத்தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள்” என்று கூறுவதைப் பார்க்கிறோம்.

இதைக்குறித்துப்போதிக்கும் இன்னுமொரு வேதப்பகுதி 2 தீமோ. 4:3. இங்கே பவுல், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாத காலம் வரும் என்று குறிப்பிடுகிறார். பவுல், சத்தானதும், ஆழமானதும், ஆரோக்கியமானதுமான உபதேசங்களை நிராகரிக்கும் கூட்டத்தைப்பற்றி இங்கே பேசுகிறார். இத்தகைய கூட்டத்தாரைப்பற்றியே யோவான் 6:60 பின்வருமாறு கூறுகின்றது, “அவருடைய சீஷரில் அநேகர் இவை களைக் கேட்ட பொழுது, இது கடினமான உபதேசம், யார் இதைக்கேட்பார்கள் என்றார்கள்”. வேத சத்தியங் களையும், வேதவரலாற்றையும் முறையாகப் படித்துப் புரிந்து கொள்ளும் ஆன்மீக வல்லமையற்றவர்களாக இருந்ததாலேயே இவர்களால் உபதேசங்களைப்புரிந்து கொள்ள முடியவில்லை. இதன் காரணமாகவே வேதத் தின் சில பகுதிகள் புரிந்து கொள்ளக் கடினமானவை யாக இருப்பதாகக் கூறுகிறோம். ஆகவே, இவற்றைப் படிப்பவர்கள் நேரத்தை செலவிட்டு, வேதத்தை வேதத் தோடு ஒப்பிட்டு, ஜெபத்தோடு உடல்வருந்திப் படித்தல் அவசியம்.

மேலும் உவமைகள் மற்றும் வேதத்தின் கடினமான உபதேசப்பகுதிகளும் வேதத்தின் எல்லாப் பகுதிகளும் இலகுவாகப்புரிந்து கொள்ளக்கூடிவையல்ல என்பதை எடுத்துக்காட்டுகின்றன. வேதத்தில் அறிவுள்ள போதகர் கள் அதன் இறையியலையும், வரலாற்றையும், அவற்றை நம் வாழ்வில் பயன்படுத்த வேண்டிய முறைகளையும் நமக்கு எடுத்துச்சொல்ல வேண்டிய அவசியத்தை இதன் மூலம் நாம் புரிந்து கொள்ள வேண்டும். இதற்காகவே திருச்சபைக்கு இயேசு கிறிஸ்து போதகர்களை அளித் துள்ளார் (எபேசியர் 4:11). போதகர்கள் இல்லாமல் வேதத்தை நாம் புரிந்து கொள்ள முடியாது என்று நாம் தப்பாகப்புரிந்து கொள்ளக்கூடாது. ஆனால், கிறிஸ்தவ வாழ்க்கையில் சத்தான போதனைகளைப்பின்பற்றி வளர்ந்து, போலிப்போதனைகளில் இருந்து நம்மைக் காத்துக்கொள்ள கிறிஸ்துவே நமக்கு சபையில் போதகர் களை ஏற்படுத்தித்தந்துள்ளார். இதை எபேசியர் 4:1–16 வரையிலான பகுதிகள் மிகத்தெளிவாகப் போதிக்கின் றன.

பாரா 8: *பழைய ஏற்பாடு எபிரேய மொழியிலும், புதிய ஏற்பாடு கிரேக்க மொழியிலும் (அதாவது, மொழி பெயர்க்கப்படுவதற்கு முன்பிருந்த அவற்றின் மூல மொழிகளில்) நேரடியாக தேவனால் ஏவப்பட்ட நாட்தொடக்கம், அவரது தனிப்பட்ட கவனத்தாலும், முன்னுணர்வாலும் பரிசுத்தமாக பேணிப் பாதுகாக்கப் பட்டு வருகின்றது. ஆகவே, அவை நம்பிக்கைக் குரியவையாதலால், சகலவித சமய சம்பந்தமான விவாதத்திற்குரிய காரியங்களிலும் திருச்சபை, அவற்றின் போதனையையே தீர்வாகவும் இறுதியானதாகவும் ஏற்றுக்கொள்ள வேண்டும். கடவுளின் மக்கள் அனைவருக்கும் வேதத்தில் உரிமையும் ஆர்வமும் இருப்பதோடு, அவர்கள் அதை*

*தேவபயத்தோடு படிக்கவும், ஆராயவும் வேண்டுமென கட்டளையிடப்பட்டிருக்கின்றது. ஆனால், எல்லோருக்கும் எபிரேய, கிரேக்க மொழிகள் தெரிந்திராததால், வேதமளிக்கும் பொறுமையினாலும், ஆறுதலினாலும் நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ளும்படி வேதம், எல்லா உலக மொழிகளிலும் துல்லியமாக மொழி பெயர்க்கப்படவேண்டும்.*

*ரோமர் 3:2; ஏசாயா 8:20; அபோஸ்தல. 15:15; யோவான் 5:39; 1 கொரி. 14:6, 9; 11-12; 24, 28; கொலோ. 3:16.*

**ஊ. வேதம் பாதுகாக்கப்பட்டவிதமும், அதன் மொழிபெயர்ப்பும் – பாரா 8**

1. **வேதம் தேவ ஆவியால் அருளப்பட்டது.**
2. **வேதம் கர்த்தரின் பாராமரிப்பினால் இவ்வுலகில் பாதுகாக்கப்படுகிறது.**
3. **எனவே, வேதம் நம்பத்தகுந்தது.**
4. **ஆகவே, வேதம் எல்லா நாட்டு மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட வேண்டும்.**

இப்பாரா வேதம் எவ்வாறு எழுதப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது என்பதைப்போதிக்கிறது. வேதம் எபிரேய மொழியிலும், கிரேக்க மொழியிலும் எழுதப்பட்டுள்ளது. அது கர்த்தரால் பராமரிக்கப்பட்டு, எக்காலத்திலும் பரிசுத்தமாக பாதுகாக்கப்பட்டு வருகிறது. வேதம் எவ்வளவு கவனமாக கர்த்தரின் பராமரிப்பின் கீழ் மூலத்தில் இருந்து அவரது ஊழியர்களால் எழுதப்பட்டு நமக்குக்கொடுக்கப்பட்டுள்ளது என்பதையே இப்பாரா சுட்டிக்காட்டுகின்றது. வேதம் எல்லா மனித மொழிகளிலும் மூலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்பதை உணர்த்துவதற்காகவே இப்பாரா இதைச் சுட்டிக் காட்டுகின்றது. எல்லோரும் மூல மொழிகளில் வேதத்தை வாசிக்கக்கூடிய ஞானத்தைக் கொண்டிராததாலேயே அது பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட வேண்டும். எலெலோரும் தங்களுடைய மொழிகளில் வேதத்தை வாசிக்க வேண்டும்.

**எ. வேதத்தின் முடிவே இறுதியானது.**

1. **வேதம் தன்னைத்தானே விளக்குகிறது.**
2. **நமது விசுவாசம் குறித்த எல்லாப்பிரச்சனைகளையும் நியாயந்தீர்த்து இறுதிமுடிவெடுக்கும் அதிகாரத்தை வேதமே கொண்டுள்ளது.**

**இதுவரை நாம் பாராக்கள் 6, 7, ஆகியவற்றில் பார்த்த** சத்தியங்களின் தத்துவ ரீதியிலான முடிவையே இப்பாரா அறிவிக்கிறது. அதாவது, வேதம் போதுமானதாகவும், தெளிவானதாகவும் இருப்பதால் எல்லாக் காரியங்களிலும் அதன் முடிவே இறுதி முடிவானதாகும் என்பதே இப்பாரா போதிக்கும் உண்மையாகும்.

இப்பாராவில் இரண்டு முக்கியமான உண்மைகளைப் பார்க்கிறோம். முதலாவதாக, வேதம் தன்னைத்தானே விளக்குகிறது என்பதாகும். அதாவது வேதத்தின் சத்தியங்களை விளக்கும் அதிகாரத்தை வேதம் தனக்குள் கொண்டுள்ளது என்பது இதன் பொருள். இது ஒரு முக்கியமான வேதவிளக்கவிதியாகும் (Principles of Interpretation). வேதத்தைப் படிப்பவர்கள் அதன் சத்தியங்களை சரிவரப் புரிந்து கொள்ள வேண்டுமானால் சில வேதவிளக்கவிதிகளை அவர்கள் பயன்படுத்தி வேதத்தைப்படிக்க வேண்டும். இவ்விதிகளை வேதமே போதிக்கின்றது. ஆனால், இறுதியில் வேத சத்தியங்களைக்குறித்து வேதம் கொடுக்கும் முடிவே இறுதித்தீர்ப்பாகும். ஆகவே, வேத மாணவன் வேதத்தை வேதத்தோடு ஒப்பிட்டுப்படித்து தான் விளங்கிக் கொண்டவைகள் சரியானவைதானா என்று எப்போதும் பார்த்துக்கொள்ள வேண்டும். அப்போஸ்தல் 15:15 இதனை உறுதிப்படுத்துகிறது. அங்கே, புஅதற்குத் தீர்க்கதரிசிகளுடைய வாக்கியமும் ஒத்திருக்கின்றதுபூ என்று வாசிக்கிறோம். இப்பாராவின் போதனைகள் ரோமன் கத்தோலிக்கப் போதனைகளுக்கு எதிராக எழுதப்பட்டவை. ரோமன் கத்தோலிக்க மதம் தொடர்ந்து, தனக்கு மட்டுமே வேதத்திற்கு விளக்கம் கொடுக்கும் அதிகாரம் இருக்கிறது என்று பேசி வருகிறது. எந்த ஒரு சமயக்குழுவிற்கும்கூட அத்தகைய அதிகாரம் இல்லை. வேதம் மட்டுமே எக்காரியத்திற்கும் இறுதித்தீர்ப்பை அளிக்கக்கூடியது.

இப்பாரா இரண்டாவதாக போதிக்கும் உண்மை சமயக் குழுக்களுக்கிடையிலும், மனிதர்களுக்கிடையிலும் ஏற்படும் முரண்பாடுகளைக்குறித்தாகும். இப்பாரா அத்தகைய முரண்பாடுகளைத்தீர்த்து வைத்து இறுதித் தீர்ப்பளிக்கும் அதிகாரம் வேதத்திற்கு மட்டுமே உண்டு என்று போதிக்கின்றது.

இதனால், விசுவாச அறிக்கை, சமயக்குழுக்களின் தீர்ப்புகள், மனிதர்களின் உபதேசங்கள் ஆகியவைகள் தவறானவை, ஆபத்தானவை என்ற முடிவுக்கு வந்து விடக்கூடாது. இவை எல்லாவற்ஹையும் நாம் வேத அடிப்படையில் ஆராய்ந்து பார்த்து வேதபூர்வமானவற்றை பின்பற்றவேண்டும். வேத போதனை மட்டுமே எப்போதும் நம்மேல் அதிகாரம் செலுத்த வேண்டும்.

இதற்கு அப்போஸ்தலர் 15 அதிகாரம் நல்ல உதாரணம். அங்கே சபைகளுக்கிடையில் ஏற்பட்ட பிரச்சனைபற்றி சபைத்தலைவர்கள் கூடி ஆராய்ந்து சபை மக்களோடு பேசி முடிவெடுத்தபோதும், அம்முடிவு வேதபூர்வமான முடிவாக இருக்கும்படி அவர்கள் பார்த்துக் கொண்டார்கள். இப்பாராவின் போதனைக்கு ஆதாரமாகத்தரப் பட்டுள்ள வேதபகுதிகளை ஆராய்வது நல்ல பலன் தரும் (மத்தேயு 22:29, 31; எபேசி. 2:20; அப்போஸ். 28:33).

## *முக்கிய அறிவிப்பு:*

*உங்களுடைய முகவரி மாறும்போது தயவுசெய்து புதிய முகவரியை எமக்கு அனுப்பி வைக்கத் தவறாதீர்கள். பத்திரிகை உங்களைத் தொடர்ந்து வந்தடைய இது துணை புரியும்.*

3

# 1 கொரி. 12–14

## (ஆவிக்குரிய வரங்களைப் பற்றிய விளக்கம்)

கடந்த இரு இதழ்களிலும் 1 கொரி. 12-14 வரையிலான அதிகாரங்களில் கொடுக்கப்பட்டுள்ள ஆவிக்குரிய வரங்கள் பற்றிய போதனைகளை நாம் முறை யாகப் புரிந்து கொள்ள, வேதத்தில் அவை எத்தகைய சந்தர்ப்பத்தில் அமைந்து காணப்படு கின்றன என்பதைக் குறித்து ஆராய்ந்துள்ளோம். இவ்வாய்வின் அடிப்படையில் நாம் கீழ்வரும் மூன்று உண்மைகளைப் புரிந்து கொண்டோம்.

1. 1 கொரி. 11:1-17 வரையிலான வசனங்கள் ஆவிக் குரிய வரங்களைப்பற்றிய போதனைகளுடன் தொடர்புடையதும், அவற்றை அறிமுகப்படுத்தும் வேதப்பகுதிகளாகவும் அமைந்துள்ளன. (இப்பகுதி களைப்புரிந்து கொள்ளாவிட்டால் 1 கொரி. 12-14 வரையிலுமான போதனைகளை நாம் சரிவர விளக்கவோ அல்லது புரிந்து கொள்ளவோ முடி யாது.)

2. இப்பகுதி ஆண்களும், பெண்களும் சபை தவிர்ந்த ஏனைய பொது இடங்களில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றிப் போதிக்கின்றன. இதனால் சபைக்கும் இதற்கும் சம்பந்தமே இல்லை என்று கூறிவிட முடியாது. ஆனால், இப்பகுதியில் பவுல், முக்கியமாக சபை தவிர்ந்த பொது இடங்களைப்பற்றியே பேசுகிறார். சபை குறித்த போதனைகள் 1 கொரி. 11:18 இல் இருந்தே ஆரம்பமாகின்றன. அநேக வேதவல்லு னர்கள் இப்பகுதியில் பவுல் ஆண்களும், பெண் களும் சபையில் எவ்வாறு நடந்து கொள்வது என்பது பற்றிப் பேசுவதாக முடிவு செய்து விளக் கங்கொடுப்பர். இத்தகைய விளக்கம் முக்கியமாக 14 ம் அதிகாரத்தில் பவுல், பெண்கள் சபையில் நடந்து கொள்ள வேண்டியமுறை குறித்துத்தரும் போதனைக்கு முரணாக அமைந்து விடுகிறது. 11-14 அதிகாரங்கள் ஒன்றோடொன்று தொடர்புடை யவையாக இருப்பதால் நாம் தந்துள்ள விளக்கமே இவை தரும் போதனைகளுடன் பொருந்திப் போகக்கூடியது.

3. 1 கொரி. 11:18 முதல் 14:40 வரையிலான பகுதி கள் கொரிந்து சபை கூடிவரும்போது நடந்த காரியங்களைப்பற்றி விபரித்து, தவறுகளைத் திருத்தி, இனி சபைகூடிவரும்போது கிறிஸ்தவர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று போதிக்கின்றன. இப்பகுதிகளில் முக்கியமாக "சபை கூடி வரும்போது" என்ற பதங்கள் அடிக் கடி பயன்படுத்தப்பட்டு, சபை கூடிவருதலின் சிறப்புத் தன்மையையும், முக்கியத்துவத்தையும் வலியுறுத்தி, சபைகூடிவரும்போது சபையார் செய்ய வேண்டிய செயல்களைப் பற்றிப் போதிக் கின்றன. ஆகவே, ஆவிக்குரிய வரங்களைப் பற்றிய இப்பகுதிகளின் போதனையை நாம் சபையை அடிப்படையாகக் கொண்டே ஆராய்ந்து புரிந்து கொள்ள வேண்டும்.

இவையே நாம் இதுவரை 1 கொரிந்தியர் 11 வது அதிகாரத்தை ஆராய்ந்து புரிந்து கொண்ட உண்மைகள். இனித்தொடர்ந்து 12 வது அதிகார த்தை ஆராய்வோம்.

### அறிமுகம்

நாம் ஏற்கனவே 12-14 வரையிலான அதிகாரங் களை ஒரே பகுதியாக எண்ணிப்படிக்க வேண்டு மென்று கூறியுள்ளோம். இம்மூன்று அதிகாரங் களும் ஒரே காரியத்தைப்பற்றியே போதிக்கின்றன. வேதம் எழுதப்பட்ட காலத்தில் அதிகாரப் பிரிவு களும், வசனப்பிரிவுகளும் இருக்கவில்லை என்பதை நாம் உணர வேண்டும். பண்ணிரண்டா வது அதிகாரத்தில் பவுல் போதிப்பது என்ன? இவ்வதிகாரத்தின் முக்கியத்துவம் என்ன? என்று இப்போது பார்ப்போம்.

இவ்வதிகாரத்தின் ஆரம்ப வசனங்களில் (1-3) பவுல் தான் ஆவிக்குரிய வரங்களைப்பற்றிப் போதிக்கப் போவதாக அவற்றை அறிமுகம் செய்கிறார். அவற்றைப்பற்றி "நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை" என்று கூறுகிறார். மூலத்திலிருக்கும் அழுத்தம் இம்மொழிபெயர்ப்பில் காணப்பட வில்லை. இங்கே பவுல் கூறுவதென்னவெனில்,

இவ்வரங்களைப்பற்றி நீங்கள் எவ்வாறு அறியாம லிருக்கிறீர்கள், நிச்சயமாக இவற்றை நீங்கள் அறிந்து கொள்ளத்தான் வேண்டும். இதைப்பற்றிய அறிவு உங்களுக்கு இல்லாமலிருப்பதை என்னால் நம்பமுடியாமலிருக்கிறது என்று பவுல் கூறுகிறார். அதுமட்டுமல்லாமல், இரண்டாம் மூன்றாம் வசனங்களில் பவுல், கிறிஸ்தவத்திற்கும், அந்நிய மதங்களுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை எடுத்துக்காட்டுகிறார். இதற்குக்காரணம், கொரிந் தியர்கள் இப்போது கிறிஸ்தவர்களாகவும், தேவனுடைய அடிமைகளாகவும் இருப்பதை எடுத்துக்காட்டி, அவர்கள் அந்நியர்களைப்போல நடந்து கொள்ளாமல் கிறிஸ்தவர்களைப்போல் நடந்து கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான். கிறிஸ்தவர்கள் அஞ்ஞானிகளைப்போல ஏவப் பட்டபடி நடந்து கொள்ள மாட்டார்கள். அதாவது, கிறிஸ்தவர்கள் சிந்திப்பவர்கள்; சிந்திக் காமல், மனத்தைப்பயன்படுத்தாமல் நடப்பது அஞ்ஞானிகளின் வழக்கம், அது கிறிஸ்தவர்களின் வழக்கமல்ல. அதுமட்டுமன்றி, பரிசுத்த ஆவியைக் கொண்டிருப்பவன் கிறிஸ்துவுக்கு எதிராகவும், அவரை அவமானப்படுத்தும் வகையிலும் நடந்து கொள்ள மாட்டான் என்றும் கூறுகிறார்.

இவ்வாறு பவுல் கொரிந்தியர்களைப் பார்த்துப் பேசுவதற்கு மேலான காரணமுண்டு. ஏனெனில், கொரிந்தியர்கள் கிறிஸ்தவர்களாக இருந்தபோதும் அஞ்ஞானிகளைப்போல தங்கள் வாழ்க்கையில் நடந்து கொண்டார்கள். ஒவ்வொருவரும் தாம் ஏவப்பட்டபடி சபையில் நடந்து, கர்த்தரை அவமதிக்கும் வகையில் நடந்து கொண்டார்கள். ஆவிக்குரிய வரங்களைப்பொறுத்தவரையில் அவர்கள், அவை ஏன்? எதற்காகக் கொடுக்கப் பட்டிருக்கின்றதென்ற அறிவே இல்லாமல், தாம் நினைத்தபடி தங்களுடைய சுயநலத்திற்காக அவற் றைப் பயன்படுத்திக்கொண்டார்கள். அந்நியர் களையும்விட மோசமாக நடந்து கொண்டார்கள். இதனாலேயே இவ்வத்தியாயத்தின் இம்மூன்று ஆரம்ப வசனங்களிலும் பவுல் கொரிந்தியர் தங்களுடைய நடவடிக்கைகளை ஆராய்ந்து பார்த்துத் திருத்திக் கொள்ள வேண்டும் என்று போதிக்கிறார். அத்தோடு, தான் இனி அளிக்க விருக்கும் ஆவிக்குரிய வரங்களைப் பற்றிய போதனைகளையும் அஞ்ஞானிகளைப் போல் இருக்காமல் அறிவு பூர்வமாகப்படித்துப் பயன் படுத்த வேண்டும் என்ற முன்னெச்சரிக்கையை யும் கொடுக்கிறார்.

இதிலிருந்து நாம் புரிந்துகொள்ள வேண்டிய ஒரு முக்கியமான அம்சமுண்டு. பரவசக் குழுவைச் சார்ந்த பொரும்பாலானோர் வேத அறிவில்லா மல் இதை எப்போதும் அலட்சியப்படுத்தி விடு கிறார்கள். அதாவது, பவுல் ஆவிக்குரிய வரங் களை இங்கே அட்டவனையிட்டுக்கொடுத்து, இவைதான் ஆவிக்குரிய வரங்கள், இவற்றை நீங்கள் இப்படித்தான் பயன்படுத்த வேண்டும் என்ற போதனையை இங்கே அளிக்கவில்லை. இன்னுமொருவிதத்தில் கூறப்போனால் இவ்வதி காரங்கள் நாம் ஆவிக்குரியவரங்களை எவ்வாறு சபையில் பயன்படுத்த வேண்டும் என்பதற்கான விதிகளை அளிக்காமல் (not prescriptive), கொரிந்தியர்கள் அவற்றைப்பயன்படுத்தும்போது விட்ட தவறுகளையெல்லாம் சுட்டிக்காட்டி (but descriptive) அத்தவறுகளைத் தொடர்ந்து செய்ய வேண்டாமென்று கண்டிப்பவையாக உள்ளன. இவ்வாறு கூறுவதால் இப்பகுதியில் நாம் படித்துப் புரிந்து கொண்டு, கடைப்பிடிக்க வேண்டிய பாடங் களே இல்லை என்று கூறவரவில்லை. அத்தகைய பாடங்கள் நிச்சயமாக காணப்படுகின்றன. ஆனால், இப்பகுதி அன்று கொரிந்து சபையில் நடந்த காரியங்களை விபரிப்பதாக இருக்கின்றது என்ற மேலான உண்மையைப்புரிந்து கொள்ளாவிட்டால் இப்பகுதியை நாம் வேதபூர்வமாகப்புரிந்து கொள்ள முடியாது. பரவசக் குழுவினர் இதனை, நாம் பின் பற்றுவதற்காகக் கொடுக்கப்பட்ட விதிமுறைகளைக் கொண்டதாகவே (prescriptive) எடுத்துக் கொள்கி றார்கள். உதாரணத்திற்கு இயேசு பேதுருவைத் தண்ணீரில் நடக்கச்சொன்ன சம்பவத்தைப் பார்ப் போம். இதைப்படித்துவிட்டு நாமெல்லாம் தண்ணீ ரில் நடக்க வேண்டுமென்று இப்பகுதி போதிக்கிற தென்று முடிவெடுத்தால் அது அறிவீனமாகும். ஏனெனில் அப்பகுதி முதலில் வரலாற்றில் நடந்த ஒரு சம்பவத்தை விளக்குகிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இரண்டாவதாக, அப்பகுதியில் அச்சம்பவத்தின் மூலம் இயேசு எதைப்போதிக்க முயல்கிறார் என்பதை ஆராய வேண்டும். இதுவே வேதம் படிக்க வேண்டிய முறையாகும்.

இன்று அநேக பரவசக்குழுவைச் சார்ந்தவர்கள் இவ்வேதப்பகுதிகளை வேதத்திற்கு முரணான விதத்தில் புரிந்து கொண்டு கொரிந்து கிறிஸ்தவர் கள் அன்று விட்ட அதே தவறை இன்றும் செய்து வருகிறார்கள்.

இம்மூன்று ஆரம்ப வசனங்களின் மூலமும் கொரிந் தியர்களை கண்டிக்கும் பவுல் ஆவிக்குரிய வரங் களைப்பற்றி நான்காவது வசனத்தில் பேச ஆரம் பிக்கிறார். ஆனால், உடனடியாக வரங்களைப்பற்றி நேரடியாகப்பேசாமல் இவ்வரங்களைக் கொரிந்தியர் கள் தவறாகப் பயன்படுத்தியதால் கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபைக்கு ஏற்பட்ட களங்கத்தையும், அவமதிப்பயையும் மனதில் கொண்டு, திருச்சபை என்றால் என்ன? என்பதை முதலில் விளக்க முனை கிறார். சரீர வளர்ச்சிக்காகக் கொடுக்கப்பட்ட வரங் களை சரீரத்தை அழிப்பதற்காகப் பயன்படுத்து வதைப் போன்ற கொடுமை இருக்க முடியாது. இதையே கொரிந்தியர்கள் செய்துள்ளனர். ஆகவே, அவர்களுக்கு கர்த்தரின் சரீரத்தைப்பற்றி நினை வூட்டவேண்டியது பவுலுக்கு அவசியமாகின்றது.

இவ்வதிகாரம் **கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபை ஒன்றே** என்ற உண்மையைப் போதிக்கின்றது. அதாவது, அத்திருச்சபையில் எந்தவிதமான பிரிவினைக்கும் இடமில்லை என்பதோடு அது ஒரே சபையாக இருக்கின்றது (The Church is one) என்பது இதன் பொருள். இதன் முதல் பதினோரு வசனங்க ளும், பலவேறுபாடான அங்கங்களைக் கொண்டு

திகழும் அச்சரீரமாகிய திருச்சபையில் ஒற்றுமை நிலவுகின்றது என்று போதிக்கின்றது (Unity in Diversity). 14 முதல் 31 வரையிலான வசனங்கள், ஒற்றுமைக்கு இலக்கணமாகத்திகழும் அச்சரீரத்தில் பல வேறுபாடான அங்கங்கள் இருப்பதாகத் தெரிவிக்கிறது (Diversity in Unity). இன்னுமொரு விதத்தில் கூறப்போனால், அத்திருச்சபையின் ஒற்றுமைக்குப் பங்கம் விளைவிக்காதவகையில் அதில் வேறுபாடான அங்கங்களும் இருப்பதாகப் போதிக்கிறது. இவ்விரண்டிற்கும் இடையில் காணப் படும் 12-13 ஆகிய வசனங்கள் இவ்வத்தியாயத்தின் முதுகெழும்பாக இருந்து தேவனின் திருச்சபை ஒன்றே என்ற உண்மையை வலியுறுத்துகிறது. இதுவே, இவ்வத்தியாயத்தின் பொதுவான போதனையாகும். இதனை இனி நாம் விளக்க மாகப் படிப்பது அவசியம்.

## வேறுபாடுகளுக்கு மத்தியில் ஒற்றுமை 12:1-11

இப்பகுதியின் ஆரம்ப வசனங்கள் (1-3) எதைப் போதிக்கின்றன என்று ஏற்கனவே பார்த்து விட் டோம். அவ்வசனங்கள் 12 முதல் 14 வரையிலான அதிகாரங்களுக்கு முன்னுரையாக அமைந்து காணப்படுகின்றன. இப்பகுதியின் ஏனைய வசனங் களை நாம் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

### 1. தேவனே வரங்களைக் கொடுப்பவர் (4-6)

4-6 வரையிலான வசனங்கள், வரங்களைக் கொடுப் பவர் ஒருவரே என்ற போதனையை அளிக்கின்றன. 4 ஆவது வசனம் வரங்களில் வித்தியாசம் உண்டு என்று தெரிவிக்கின்றது. அதாவது, வரங்கள் பல விதமானவை என்று இதற்குப் பொருள். 5 ஆம் வசனம் ஊழியங்களும் பலவிதமானவை என்று தெரிவிக்கின்றது. 6 ஆம் வசனம் கிரியைகளும் பலவிதமானவை என்று தெரிவிக்கின்றது. இங்கே, இம்மூன்று வசனங்களிலும் "வரங்கள்", "ஊழியங் கள்", "கிரியைகள்" ஆகிய பதங்கள் ஒரே காரியத் தைக்குறிப்பவை. இதன்மூலம் பவுல், எல்லாவித ஆவிக்குரிய நடவடிக்கைகளும் கர்த்தராலேயே நடப்பிக்கப்படுகின்றன என்று கூறுகின்றார். எந்த வித வரமோ, ஊழியமோ, கிரியையோ தேவனா லேயே கொடுக்கப்படுகின்றது. அவ்வரங்களைக் கொண்டிருக்கின்ற எந்த மனிதனும் தன்னைப் பெருமை பாராட்டிக்கொள்ளக்கூடாது. அவற்றைக் கொடுக்கின்ற தேவனே எல்லா மகிமையையும் பெற வேண்டும்.

### 2. வரங்கள் அனைவரது நன்மைக்காகவும் கொடுக்கப் படுகின்றன (7)

7 ஆவது வசனம் தமிழில் சரிவர மொழி பெயர்க் கப்படவில்லை. இவ்வசனம் தமிழில், "ஆவியினு டைய அனுக்கிரகம் அவனவனுடைய பிரயோ ஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கின்றது" என்றிருக்கிறது. ஆனால் இது, "ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் ஆவியின் அனுக்கிரகம் அனைவருடைய நன்மைக்காகவும் கொடுக்கப்பட் டிருக்கின்றது" என்றே மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண்டும். இதுவே சரியான மொழி பெயர்ப்பு. இதனையே பவுல் இங்கே போதிக்கிறார். ஆவியி னுடைய வரங்கள் தனிமனிதனுடைய நன்மைக் காகவோ அல்லது அவன் தன்னைப் பெருமைப் படுத்திக்கொள்ளவோ கொடுக்கப்படவில்லை. இதுவே பரவசக்குழுவைச் சேர்ந்தவர்கள் இன்று விடும் மிகப்பெரும் தவறு. வரங்களை அவர்கள் தங்களுடைய சொந்த நன்மைக்காக, தங்களுடைய மனம் போனபோக்கில் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறார்கள். வேதம் இதற்கு மாறாக ஆவியின் அனுக்கிரகம் எல்லோருடைய நன்மைக்காகவும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று போதிக்கின்றது. அதாவது ஒரு தனி நபருக்குக் கொடுக்கப்படும் ஆவியின் வரம் முழுச்சபையின் நன்மையை மனத் தில் கொண்டே கொடுக்கப்படுகிறது. அந்நபர் அவ்வரத்தை சபைமக்களின் நன்மைக்காக, வேதக் கட்டுப்பாடுகளுக்கு அடங்கிப் பயன்படுத்த வேண் டும். இவற்றின் மூலம் சபைக்குக் கிடைக்கும் நன்மைக்கே இவ்வசனம் முக்கியத்துவமளிக்கிறதே யொழிய தனிமனிதனுக்கல்ல.

இதைச்சுட்டிக்காட்டவே 8-11 வரையிலான வசனங் களில் பல வரங்களைப் பற்றிப் பவுல் பேசுகிறார். இவ்வசனங்கள், ஆவியானவர் பல்வேறுவகையான வரங்களை ஒவ்வொருவருக்கும் தனது விருப்பப் படிக் கொடுத்து சபையைக்கட்டி வளர்க்கிறார் என்று போதிக்கின்றது. இப்பகுதியில் பல வரங் களைக்குறித்துப் பவுல் எழுதும்போது எல்லா வரங்களையும் பட்டியல் போட்டுக்கொடுப்பது அவரது நோக்கமாக இருக்கவில்லை. ஏனெனில் அது பவுலாலும் முடியாத காரியம். அத்தோடு, இவ்வரங்கள் எத்தகைய தன்மையுள்ளவை என்று பவுல் விளக்க முனையவில்லை என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஏனெனில், அவற் றிற்கு விளக்கம் கொடுத்து இப்படித்தான் அவற் றை நாம் பயன்படுத்த வேண்டும் என்று போதிப் பது பவுலின் நோக்கமல்ல.

(வளரும்)

## வாசகர்கள் கவனிக்கவும்

இதுவரை வந்துள்ள இதழ்கள் கிடைக்கவில்லை என்று எழுதியவர்களுக்கெல்லாம் முன்னைய இதழ்களை அனுப்பி வைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். அவை கிடைத்தவுடன் தயவு செய்து எழுதித்தெரிவியுங்கள். சமீபத்தில் சபைப் போதகர்களுக்கும், கிறிஸ்தவ சுவிஷேச ஊழியத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு நாம்இதுவரை வெளியிட்டுள்ள நூல்களை அனுப்பி வைக்க கர்த்தர் கிருபை புரிந்தார். தேவ ஊழியத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு நமது வெளியீடுகள் பயன் தருமானால் எமக்கு எழுதலாம். எழுதும்போது உங்களது ஊழிய விபரங்களையும் எழுத மறக்காதீர்கள். – ஆசிரியர்

# எண்ணங்கள் !

திருமறைத்தீபம் சஞ்சிகையை முறையாக அனுப்புவதற்காக எனது மனமுவந்த நன்றியைத் தெரிவிக்கிறேன். எனக்கும் என்னைப்போன்ற இளம் பணியாளர்களுக்கும் சஞ்சிகை மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது. உபதேசத்தில் தெளிவடையவும், சரியானதைக் கற்றுத்தருகிற ஓர் நல்ல ஆசானாகவும் இருக்கிறது. வியாபார நோக்கில் எதை எதையோ எழுதிப்பல குழப்பமான உபதேசங்களைப் பரப்பும் பல சஞ்சிகைகள் மத்தியில் இது இன்று நல்ல வழி காட்டியாக இருக்கின்றது. இந்நாட்களில் என்னை ஊக்கப்படுத்தக் கடவுள் பயன்படுத்தும் நல்ல தோழன் திருமறைத்தீபம்.

*பாஸ்டர் எஸ். தேவதாசன், ஸ்ரீ லங்கா*

ஏப்பிரல்—ஜூன் 97 இதழில், சார்ள்ஸ் பினியின் தவறான கருத்துக்களை உடைத்து, வேதபூர்வமான வசனத்தின் மூலம் வருகிறதே உண்மையான மறுபிறப்பு என்ற நீங்கள் எழுதிய வார்த்தைகள் மூலம் பரிசுத்த ஆவியானவர் என்னோடு பேசி அச்சத்தியத்தை உணரச் செய்தார். பத்திரிகையின் பல பகுதிகளும் என்னைக் கவர்ந்து கிறிஸ்துவுக்குள்ளும், ஊழியத்திலும் என்னை வளரச் செய்கிறது. பத்திரிகையை தொடர்ந்து அனுப்பி வையுங்கள்.

*எஸ். செல்வம், தமிழ்நாடு*

தங்களுடைய பத்திரிகை சிந்தனைக்கு நல்ல விருந்தளிப்பதோடு, விசுவாச வேர் உறுதியாக வளரவும் உதவுவது மகிழ்ச்சிக்குரியது. கல்லூரி மாணவனாகிய எனக்கு இது ஒரு நல் வழிகாட்டும் தீபமாக அமையும் என்பதில் ஐயப்பாடுகள் இல்லை. தொடர்ந்து எனக்கு பத்திரிகையை அனுப்பி வையுங்கள்.

*எம். காபிரியேல், தமிழ்நாடு*

கேரளத்தில் என்னுடைய மாமனார் வீட்டிற்குப் போயிருந்தபோது பத்தரிகையைப் பார்த்துப்படிக்க முடிந்தது. நல்ல பல ஆக்கங்களை உள்ளடக்கிய இப்படியொரு நல்ல பத்திரிகையும் இருக்கிறதே என்று ஆச்சரியப்பட்டேன். பத்தரிகையை எனது குடும்பத்திற்கும் அனுப்பி வையுங்கள்.

*ஆர். எம். டொமினிக் சேவியோ, போபால், இந்தியா*

அநேக தவறான போதனைகள் மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் இந்நாட்களில் தங்களின் திருமறைத்தீபம் இதழ் சத்தியத்தை சத்தியமாய்ப் புகட்டி இருளிலிருக்கும் கிறிஸ்தவர்களுக்கும், ஊழியர்களுக்கும் வெளிச்சம் காட்டும் தீபமாக இருக்கின்றது. நானும் அநேக விடயங்களைக் கற்றுக்கொண்டேன். மேலும் கற்றுக் கொள்ள விரும்புகிறேன். பத்திரிகையை நிறுத்தாது தொடர்ந்து அனுப்பி வையுங்கள்.

*என். லலித் ராம் குமார், ஸ்ரீ லங்கா*

*(தொடர்ந்து கடிதமூலம் தொடர்பு கொண்டு இப்பணியில் எம்மை ஊக்குவிக்கும் வாசகர்களுக்கு எமது நன்றி. - ஆசிரியர்.)*

## உள்ளே . !

1. உப்பு தன் சாரத்தை இழந்தால்
2. கிறிஸ்தவக் கோட்பாடுகள்
3. வில்லியம் கேரி
4. நீ கற்று நிச்சயித்து
5. பரிசுத்த வேதாகமம்
6. 1 கொரி. 12-14
7. எண்ணங்கள் !